133

வேளாண்மாந்தர்

# சேனைத்தலைவர்

அல்லது

## சேனைக்குடையார்

பூர்வசரித்திரம்

OFFICE OF THE ... OF BOOKS
1928

இது

சென்னை, "நியூ ரிபார்மர்" பத்திராதிபரும்
சென்னை "புதிய சைவ சித்தாந்த சபையின்"
காரியதரிசியும், அகில இந்தியா-
பர்மா ஆங்கிலேய சைவ சித்தாந்த சபையின்
பிரதானாதிகாரியும், சேனைத்தலைவர்
5-வது மகா நாட்டின் அக்கிராசனாதிபதியுமாகிய

**D. கோபால செட்டியாரால்**

எழுதப்பட்டு,

அவரால் சென்னையில் பிரசுரம் செய்யப்பட்டு,
தென் ஆபிரிகா டர்பன் நகரத்தில்
பிரபல வியாபாரி

**ரா. பாலகுரு செட்டியாருக்கு**

சமர்ப்பிக்கப்பட்டது.

சென்னை
பாவார் அண்டு கம்பெனியார் அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பட்டது.

1928

...rved.] [விலை அணா 4.

... Gopaul Chetty, Madras.

Y592V
N28
167507

வேளாண்மாந்தர்

# சேனைத்தலைவர்

அல்லது

## சேனைக்குடையார்

பூர்வ சரித்திரம்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
6 JUN 1928
MADRAS

இது

சென்னை, "நியு ரிபார்மர்" முன் பத்திராதிபரும்
சென்னை "புதிய சைவ சித்தாந்த சபையின்"
காரியதரிசியும், அகில இந்தியா-
பர்மா ஆங்கிலேய சைவ சித்தாந்த சபையின்
பிரதானாதிகாரியும், சேனைத்தலைவர்
5-வது மகாநாட்டின் அக்கிராசனாதிபதியுமாகிய

**D. கோபால செட்டியாரால்**

எழுதப்பட்டு,

அவரால் சென்னையில் பிரசுரம் செய்யப்பட்டு,
தென் ஆபிரிக்கா டர்பன் நகரத்தில்
பிரபல வியாபாரி

**ரா. பாலகுரு செட்டியாருக்கு**

சமர்ப்பிக்கப்பட்டது.

சென்னை
பாவார் அண்டு கம்பெனியார் அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பட்டது.

**1928**

All Rights Reserved.] [விலை அணா 4.

Published by D. Gopaul Chetty, Madras.

# முன்னுரை

---

நம் சேனைத்தலைவர் அல்லது சேனைக்குடையார் சரித்திரத்தை, 1844-ஆம் வருஷத்தில் நம்மினத்தவராகிய சென்னையிலிருந்த வித்துவான் காஞ்சிபுரம் சபாபதி முதலியார் சேனைத்தலைவர் மரபுவிளக்கம் எனும் நூலாக எழுதிவைத்தனர். அதில் அவர் ஸ்காந்தபுராணம் ஒன்றையே ஆதாரவாகக்கொண்டு சரித்திரத்தை முடிவு செய்தனர். ஆயினும் இந்நூலாசரியாகிய Mr. D. கோபால செட்டியார், ஸ்காந்த புராணத்துடன், பெரியபுராணம், தொல்காப்பியும் போன்ற பூர்வீக நூல்களிலிருந்தும், இதர நூல்களிலிருந்தும் இன்னும் அநேக புதிய ஆராய்ச்சிகளால் கண்டுபிடித்த ஆதாரவுகளைக்கொண்டும், இந்நூலை யுரைந்துள்ளார். இந்நூலில் நம்மினத்தவர் உற்பத்தி, பெருமையும், முதுமையும் நன்கு விளங்குகிறது. ஆகையால் நம்மினத்தவர் ஒவ்வொருவரும் இந்நூலை வாசித்து நம் குல சிறப்பை அறிதல் இன்றியமையாதது. பின்வரும், இந்நூலாசரியர் அகவலை, தினம்தினம் தியானித்து நன்னெறி நிற்றல் வேண்டும்,

இந்நூலாசரியர் உலகெங்கும் பேர்பெற்றவர். இப்புத்தகத்தில் சேர்த்திருக்கும் அவர் சரித்திரத்தையும் யாவரும் வாசித்து ஆனந்தம் அடைதல் வேண்டும்.

நாகப்பட்டணம்
10—2—1927.

K. C. சுப்பிரமணிய செட்டியார்,
பாரிஸ்டர்.

Y563V
N28

உ

சிவமயம்.



# சுப்பிரமணியர் அகவல்.

சூரனை யழிக்க மாலயன் சுரரும்
தீரனை திரட்ட வேபூ சித்து
வாழ்த்த வாமன் தீபொறி களாறும்
வீழ்த்த விள்ளிய முகமா றுடையோனே !
நின்பின் நீண்டவர் நவவீ ரர்தம்
மின்னு மினமாம் சேனைத் தலைவர்
என்றும் போற்று மெங்குல அணங்கே !
சரவணோர் பவனே ! சங்கர பாலக !
திருமால் மருமானே ! திருமுருகா ! செல்வ !
வெருட்டிய கிரிதனை துளைத்த வேலா !
வேதமோ தியசதுர் முகனை வென்றோய் !
மேதகம் நிறைமால் வேதா மிளிர்ந்து

அடிமுடி யறியா நின்ற ஆதியும்
கொடிதனில் திரிபுரம் கொடித்த வில்லியும்
பிரணவப் பொருளறி யாமற் பேர்த்து
பிறமை கொண்டு பாங்கர் பீறி
நின்முன் திகைத்து நின்றா ரென்றால்
தென்பெரு நம்மை யானும் தெரித்தலாமோ !
இன்னணம் தகப்பன் சாமியாய் எழுந்தவரே !
அன்று அன்று சோதி கந்தன்
நின்ற தேவி நேர்ந்த மூவர்
கூத்தன் உடல்கிரியை போன்ற கூத்து.
நீத்தல் வேண்டும் நீவிர் மூவராயின்
சத்து தற்பரன் பரத்துவ முறவியும்
முத்து முருகன்! சித்துரு உடலும்
சத்தி சத்தி யும்கிரியை யாகும்.
மூவர் ஓர்சா ரம்ஓர் முத்தர்
பாவகி! சிவனே,! சிவனே; பாவகி
கலியுக வரதரே ! தமிழக கடவுளே !
வலியுறு முருகா! வானவ ரிறைவா !
சரணம்! போற்றி, சரணம், போற்றி
அரணிரு தயமல ராண்ட அண்ணலே !
திரணமே சிந்திக்கில் தாமுமே யறிவீர்.
வேண்டேன் கீர்த்தி வேண்டேன் செல்வம்
தீண்டேன் தீங்கென நினைவேண் டாரை.
நினையலால் பிரிதொரு இறைவனை நினையேன்
வினையெலாம் களைந்து பாவம்வீழ்த்தி
நின்பொன் கழற்கு நிற்க வேண்டும்
என்செய லெதிலும் நின்னை கண்டு

நின்செய லெல்லா மென்று நின்று
என்னுடல் பொருளாவி யாவு மீந்து
தன்னிட வசமாம் தவநிலை காட்டுதி !
நல்லார் நட்பும் நின்பூசை நேசமும்
மல்லால் படிமீதில் மற்று எற்றே !
நானென்ன துவெனு மாணவம் நாண
தேனென திகழும் நீரென்னுள் தேங்கி
கவடும் பொய்யும் பகையும் களைந்து
சுவடும் சினமும் ஆசையும் சுழற்றி
முற்றும் பாச பந்த மோட்டி
மற்றும் யாவையும் தன்போல் மண்ணி
உன்னில் வேறும் யானு மொன்றாக
பொன்னடி மனதினில் பொறித்தல் வேண்டுமே.

D. கோபாலசெட்டி.

உ

கணபதி துணை

# சேனைத்தலைவர் பூர்வசரித்திரம்

காப்பு

தாலமே போற்றும் குமரனின் தானையர்
சீலமே கோள்சரிதை தீட்டவே—சாலவே
மூலப் பொருடன்னில் மூண்ட களிறே
காலத் தறிவைக் கலக்கு.

1. அத்தியாயம்

## திராவிடர் அல்லது தமிழர் யார்?

வங்காள ராஜதானியின் மேற்கு அறைபாக வடதேசங்களிலிருந்து கன்னியாகுமரி வரையிலுள்ள பாகங்களிலும் இலங்கையிலும், பெலுசிஸ்தான் தேசத்திலும் கலப்பற்ற திராவிடர்களிருக்கிறார்கள். அவர்கள் மொத்தம் பதினொரு கோடியே முப்பது லட்சம் ஜனங்கள். இதைத்தவிர கலப்புற்ற திராவிடர்கள் இந்தியாவில் சுமார் பத்துகோடி ஜனங்களிருக்கிறார்கள், மகமதியர் எழுகோடி இந்தியாவிலிருக்கிறார்கள். இவர்கள் மங்கோலிய துர்கி நாட்டாரின் வமிசம். ஆகையால் இந்தியாவிலுள்ள சுமார் முப்பத்தி ஒன்னறை கோடியில் சுமார் மூன்றுகோடி ஆரியர்களும் மற்றவர்களுமிருக்கிறார்கள். தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்

ணடம், துளுவம், கொச்சி, காண்டு, தோடா, கோட்டா, ராஜமகால், உரேயான், ப்ராஹூஇ முதலிய பன்னிரண்டு பாஷைகளும் திராவிட பாஷைகள்.

இத்திராவிடர் இந்தியாவின் பூர்வீககுடிகள். ஆரியர் பின்னிட்டு வந்தவர்கள். இத்திராவிடர் ஆதியில் யூபிரடிஸ், டைகிரிஸ் நதிகளின் மத்தியிலுள்ள "ஏலம்" நாட்டிலிருந்து இத்தேசம் வந்தவர்கள் என்பர் சிலர். வேறு சிலர் இந்தியாவின் தெற்கிலிருந்ததும் கடல் கொள்ளப்பட்டதுமான "இலேமூரியா" கண்டத்திலிருந்து வந்தவர்கள் என்று கூறுவர். மற்ற சிலர், ஆரியர் இந்தியாவிற்கு பின்காலத்தில் வந்தவழியாக இத்திராவிடர் முன்னர்வந்து, நியுஜிலாந்து வரையில் பரவியிருந்த இந்தியாவின் தென்பாகத்தில் குடியேறினர் என்பர். வேறு சிலர் திராவிடர் மத்திய ஆசியாவிலிருந்தவர்களென்றும், சிலர் இமயகிரி மூலமாய் இந்தியாவின் வடகிழக்கு கணவாய் வழியாய் வந்தனரென்றும் கூறுகிறார்கள். திராவிடர் இந்தியாவின் ஆதிகுடிகளே என்பாருமுளர். இவைகளிலெல்லாம் சிறிது சிறிதாயினும் உண்மையிருத்தல் கூடும்.

"1800 வருஷங்களுக்கு முன்னர் தமிழர்" எனும் நூல் எழுதிய ஸ்ரீமான் கனகசபை என்பவர் இந்தியாவின் பூர்வ குடிகள், வில்லவர், மீனவர் என்றும், மத்திய ஆசியாவிலிருந்துவந்த நாகர்களால் இவர்கள் ஜெயிக்கப்பட்டார்களென்றும், தேவநாகரி என்கிற பாஷையின் எழுத்துகளை இந்நாகரிடம் ஆரியர் தெரிந்துக்கொண்டார்களென்றும், சொல்லுகிறார். மேலும் தமிழ் நூல்களில் கூறப்படும் மறவர், எயினர், ஒவியர், ஒலியர், அருவளர், பரத்துவர்

முதலியோர் மேல்கூறிய* நாக வமிசத்தை சேர்ந்தவர். இந் நாகர் நெசவு தொழில் தெரிந்தவர். செங்குந்தர் இந்நாக ரில் ஒயினர் வகுப்பைச் சேர்ந்தவர். இந்நாகர் பின்னர் இம யமலையின் வடபாலுள்ள மிகவும் உயர்வான திபேத் பீட பூமியிலிருந்து வந்து மங்கோலிய வமிசத்திற்கு சேர்ந்த "தம்ரலிட்டி" அல்லது தமிழர்களால் ஜெயிக்கப்பட்டனர். இத்தமிழர் தென் நாடுகளிற் புகுந்து, அங்கு வாழ்ந்திருந்த நாகர் முதலியோரை வென்று நாட்டைக்கைகொண்டு, வட வேங்கடம் தென்குமரிக்கு இடையே யுள்ள நாடுகளில் தங்கி ஆட்சி புரிவாராயினர். இவர்கள் ஆட்சி புரிந்த இடமே "தமிழகம்" எனப்படும்.

இவ்வாறு, நாட்டைத் தம் வசப்படுத்த முதன் முதல் முயன்ற தமிழ் மக்கள் குழுவிற்குத் தலைமை வகித்தவர், ஏனையோரை நோக்கப் பழைமை வாய்ந்திருந்தமையின் "பழையர்" என அழைக்கப்பட்டனர். இவர்களே பாண் டியராவர். பழைமை எனப்பொருள்படும் பண்டு என்னும் சொல்லடியாக பிறந்த பண்டையர் என்பது பாண்டியர் என மரீஇ நின்றது. இவர்கள் தான் மாறர் என்போர். இவர்கள் பாண்டிய இராஜ்யத்தை ஸ்தாபித்தினர். இவர்க ளுக்குப்பின் கடல் வழியாக வந்தவர் திரையர் என்றழைக் கப்பட்டனர். இவர்களே சோழர்களாவார். இவர்களுக்குப் பின் வந்தவர், கொல்லி நீலகிரி மலைகளை தமக்கு வாழும் இட மாகக் கொண்டதற்கேற்பத் தம் முன்னோர்களைப்போல வே தம்மை வானவர் என வழங்குவாராயினர். இவர்களின் முன்னோர்கள் இமயமலையின் வடபால் உயர்வான மேட்டு நிலையிலும், மலை அடிவாரங்களிலும் வாழ்ந்து வந்தபடியி

ணல், ஈழே வசித்தவர்களை விட உயர்ந்தவர் என கருதி வானவர் என்று சொல்லிக்கொண்டனர். இவர்களே சேர ராவர், நான்காவது வந்தவர் கொங்கு தேசத்திற்கு வந்த கோசார் வம்சத்தார். இவ்விதம் நான்கு தமிழ் ராஜ்யங்கள் தமிழகத்தில் ஏற்பட்டதாக ஸ்ரீமான் கனகசபை கூறுகின்றனர்.

இந்தியாவின் பூர்வகுடிகள் கருப்பு நிறமுள்ள ஓர் வகை நீக்ரோ ஜாதியார் என்பாருமுளர். வெறு சிலர் அவ்வாறு இருந்தாலும், அவர்கள் நாகர்களுடன் விவாகம் முதலியது செய்துகொண்டு கலந்து கொண்டார்கள் என்பர். தமிழர் தென்னாடு வந்தபிறகு நாகரும் தமிழரும் விவாகம் முதலியது செய்துக்கொண்டு கலந்து கொண்டனர்.

மணிமேகலையில் கூறுகிறதாவது:—
"வேன்றிவேற் கிள்ளிக்கு நாக நாடாள்வோன்
றன்மகன் பீலிவளை தான் பயந்த
புனிற்றிளங் குழவி"

அதாவது "நாகநாட்டு அரசன் குமார்த்தி பீலிவளை என்பவள், ஜெயக்கொடி ஏந்திய சோழன் கிள்ளி என்பவனுக்கு ஈன்ற இளங்குழந்தை"

இதனால் தமிழ் அரசனாகிய கிள்ளிக்கும் நாகநாட்டு பெண் பீலிவளை என்பவளுக்கும் விவாகம் நடந்ததாக ஏற்படுகிறது. இம்மாதிரியே தமிழர்களும் நாகர்களும் கலப்புற்றார்கள். இவர்களெல்லாம் கடைசியில் ஒரு வகுப்பினராய் தமிழர் என்று பெயர் பெற்றனர்.

தமிழ் இலக்கண வித்துவான்களும் கூட திராவிட

நாட்டிலிருந்தவர்களை உயர்திணையில் மக்கள், தேவர், நரகர் என்றனர். இதில் நரகர் என்பது நாகர், மக்கள் என்பது தமிழ் மக்கள். தேவர் என்பது ஆரியபிராமணர். நரகர் என்பது நாகர் என்கிற பூர்வகுடிகள். காடுகளிலும் தாழ்ந்த நிலங்களிலும் விளங்காத இடங்களிலும் (நரகம்) இருந்த பூர்வ குடிகளுக்கு நாகர் என்று பெயர். மேல் கூறியவைகளால் திராவிடர் அல்லது தமிழர் என்பது ஆதி குடிகள், நாகர், தமிழர் என்கிற மூவகை ஜனங்கள் ஒன்று பட்ட பிறகு உண்டான பெயர்.

தொல்காப்பியம் என்கிற ஓர் பண்டை நூல் சுமார் 2500 ஆண்டுகளுக்கு முன்னர் தொல்காப்பியர் என்பவரால் எழுதப்பட்டது. அது சரித்திர ஆராய்ச்சிக்கு உள்பட்ட நூல். இத்தொல்காப்பியம் இவ்விதம் ஒன்றுப்பட்ட திராவிடர் அல்லது தமிழர் எட்டுவகுப்பினராய் பிரிந்திருந்தனர் என கூறும். 1 அறிவர். இவர்கள் ஊர்களுக்கு வெளியேயிருந்தனர். இவர்களுக்கு திரிகாலகியானமுண்டு. இவர்கள் ஆரியபிராமணர்களுடன் சேருகிறதில்லை (தொல். மரபியல் III. 502). 2. உழவர்-இவர்கள் நிலத்தை உழுது பயிர் செய்பவர். இவர்களுக்கு தான் காணிபாட்சி உண்டு. 3. ஆயர் அல்லது இடையர். 4. வேடுவர். இவர்கள் வேடர்கள். 5. கன்ளர். கம்மாளர்கள். 6. படையாட்சியர். ஆயுதம் தரித்தவர்கள். 7. வலையர், செம்படவர். 8. புலையர். தோட்டிகள். தொல்காப்பியர் இவ்வெண்வகையில் அறிவர், உழவர், ஆயர், வேடுவர் என நான்கு வகுப்பினரை மாத்திரம் கூறி மற்ற நான்கு வகுப்பினரைப்பற்றி யாதொன்றும் சொல்லவில்லை. மேலும் அத்தொல்காப்பியத்

திலேயே தமிழர்கள் குறிஞ்சி மக்களென்றும், முல்லைமக்களென்றும், மருதமக்களென்றும், நெய்தல் மக்களென்றும் ஐந்திணைகளை அநுசரித்து ஐவகையாக இருந்தனர் என்று கூறப்பட்டுள்ளது.

இந்நாட்டில் ஜாதி வித்தியாசம் என்பது தொல்காப்பியர் காலத்திலும், அதற்கு பின்னரும் அநேக நூற்றுண்டுகளாக தமிழரில் இருந்ததில்லை. இவ்விதமாக ஜாதிவித்தியாசம் என்பதே தெரியாமலிருந்த தமிழரில் முதல் முதல் ஜாதிவித்தியாசம் ஏற்படுத்த முயன்றவர் தொல்காப்பியரே. இவர் ஆரியபார்ப்பனர். இவரால் ஜாதிவித்தியாசங்கள் ஏற்படுத்த முடியாவிட்டாலும் எண் வகுப்பினராயிருந்த தமிழரை நாலு வகுப்பினராக பிரித்தனர். அதாவது 1, அந்தணர், 2. அரசர், 3. வைசிகர், 4. வேளாளர். தொல்காப்பியருக்கு அறிவர் என்போர் தெரிந்திருந்தும் அவர்களை தன்னிடநூலில் பல இடங்களில் கூறியிருந்தும் அவர்களை முதல் வகுப்பினராக வைக்காமல் ஆரியபிராமணரை முதல் வகுப்பில் வைத்தார். இரண்டாவது வகுப்பில் அரசர்களை வைத்தார். யுத்தவீரர்களை தள்ளிவிட்டார். மூன்றுவது வர்த்தகம் செய்பவர்களை வைத்தார். நான்காவதாக உழவர் என்கிற வேளாளரை வைத்தார். இவைகள் வகுப்புகளே ஒழிய ஜாதிகள் அல்ல என்பதை கவனித்தல் வேண்டும். தொல்காப்பியர் பிரித்த இந்நால் வகுப்புகள், எட்டுதொகை, பத்து பாட்டு, பதினெண்கீழ் கணக்கு என்கிற நூல்களிலும், சேனவரையர், இளம்பூரணர், அடியார்க்கு நல்லார், நச்சினார்க்கினியார், முதலியவர்களாலும் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கின்றன. இந்நால்வகையில் சேனைத் தலைவர் மரபு வேளாளர் வகுப்பைச்சேர்ந்தது.

2. அத்தியாயம்.

# சேனைக்குடையார்

அல்லது

# சேனைத்தலைவர் மரபு வரலாறு.

முன் அத்தியாயம் முடிவில் சேனைக்குடையார் அல்லது சேனைத்தலைவர் வேளாளர் என்று கூறினோம். வேளாளர் என்னும் சொல், வேளாண்மையென்பதிலிருந்து வந்தது. இதன் சாதாரணப்பொருள், பயிர் செய்தல், தானஞ் செய்வோன் எனப்படும். இன்னும் வேளாண்மை என்பது, நன்றி, ஈகை, வேளாண்டொழின்மை முதலிய பல பொருட் குறித்த ஓர் சொல். அஃது வேளாண்தொழில் உடைமையால் அன்றி, ஈகை முதலிய நற்செய்கை உடைமைக்கும் உரியதோர் குடிப்பண்பாயிற்று. இன்னும் வேளாண்டொழில், வேள்=நன்னிலம், ஆள்=உரிமைத்தலைமை, தொழில்=முயன்று முடித்தல், இதனால் நன்னிலம் திருத்தி சென்னெறிப்பொங்க பைங்கூழ் விளைக்கு முரிமைத்தலைமைத் தொழிலென்னப்படும். இன்னும், வேள்=விரும்பப்படுகை, ஆண்தொழில்–ஆண்மைதொழில். இதனால் அரசரால் விரும்பப்படும் மந்திரித்தலைமை, சேனைத்தலைமை முதலிய ஆண்மைத்தொழிலுடையோர் என்பதும் அமையும்.

ஆசிரியர் நச்சினார்க்கினியார், தொல்காப்பியம், பொருளதிகாரம், அகத்திணையியல் 30-ம் சூத்திர விசேட உரையில் அடியில் வருமாறு கூறுகின்றனர்:— "வேளாளர் இருவகையர்; உழுதுண்போரும், உழுவித்துண்போரும் என. இவருள் உழுவித்துண்போர், மண்டிலமாக்களும், தண்டத்

தலைவருமாய்ச் சோழநாட்டு பிடவூரும், அழுந்தூரும். நாங்கூரும், நாவூரும், ஆலஞ்சேரியும், பெருஞ்சிக்கலும், வல்லமும், கிழாரும் முதலிய பதியிற்றோன்றி வேளெனவும், அரசெனவும், உரிமை எய்தினோரும், பாண்டியநாட்டுக் காவிதிப் பட்டமெய்தினோரும், குறுமுடி குடிபிறந்தோர் முதலியோருமாய், முடியுடை வேந்தர்க்கு மகட் கொடைக்கு உரிய வேளாளராம். * * * * * * *

"உருவப்பஃறேர் இளஞ்சேட்சென்னி அழுந்தூர் வேளிடை மகட் கோடலும் அவன் மகனாகிய கரிகாற் பெருவளத்தான் நாங்கூர்வேளிடை மகட்கோடலும்" கூறுவர்.

தொல்காப்பியர் காலத்து வேளாளர், உழுதுண்பார் எனவும், உழுவித்துண்பார் எனவும் இருபிரிவினராக இருந்தார்கள். ஓதல், வேட்டல், ஈதல், உழவு, நிரையோம்பல், வாணிகம் ஆகிய அறு தொழிலுடையவரா யிருந்தனர். இவருள் உழுதுண்பார், உழுவித்துண்பாரினும் தாழ்ந்தோர் எனக் கருதப்பட்டனர் போலும். உழுதுண்பார் வேள்வி செய்தற் குரியரல்லராய் பிறர்க்கு வழிபாடு செய்தலும் அவர் தருமமாயிருந்தது. வாணிக வாழ்க்கையே பொருள் வருவாய்க்கேதுவாய் கொண்டிருந்த வேளாளரும் சிலர் இருந்தனர். உழுவித்துண்ணும் வேளாளர் பிறரை ஏவி வேலைக்கொள்ளும் தன்மையர். இவருட் பலர் அரசரால் தண்டத்தலைவராக நியமனம்பெற்று (தண்டம்=சேனை, தண்டத்தலைவர்=சேனைதலைவர்) அரசரால் படைக்கலமும்; கண்ணியும் கொடுக்கப்பெற்று பகைவர் மேலும், நாடுகாத்தல், சந்து செய்வித்தல், முதலிய தொழில்கள் மேலும் சேனைத்தலைவராய் சென்றனர். அரசரால் கொடுக்கப்படும் ஏனாதி, காவிதி முதலிய சிறப்புப்பட்டங்கள் பெறுதற்கு

றியாரும் இவர்களே. அன்றியும் உழுவித்துண்ணும் வேளாளர் மண்டிலமக்களும், (மண்டிலம் = சேனை; மண்டில மக்கள் = சேனைமக்கள் = சேனைக்குடையார்) அதாவது சேனைக்குடையாரும், தண்டத்தலைவருமாய் அதாவது சேனைத் தலைவருமாய், முடிஉடை வேந்தர்க்குப் பெண்கொடுத்து சம்மந்தம் செய்து வாழ்ந்து வந்தனர்.

இதற்கு ஆதாரம். தொல்காப்பியம், பொருளதிகாரம் மரபியல் 636-வது பாடல்:—

"வேந்துவிடு தொழிலிற் படையுங் கண்ணியும்
வாய்ந்தனரென்ப வவர் பெறும் பொருளே"

இதன் பொருள் "வேந்தர் கொடுப்பின் வேளாண்மாந் தர்க்காகும் படைக்கலமும் கண்ணியும் பெரும் பொருளாக கொள்ளப்படும்" என்றார் உரையாசிரியர்.

அந்நூலிலேயே மரபியல் 638-வது பாடல் அடியில் வருமாறு:—

"வில்லும் வேலும் குழலும் கண்ணியும்
தாரு மாரமும் தேரும் வாளும்
மன்பெறு மரபினே னோர்க் குறிய"

இவ்விதமாக தொல்காப்பியத்தில், மண்டிலமாக்கள் என்றும், தண்டத்தலைவர் என்றும், வேளாளரில் ஒரு வகுப்பினரைக்கூறியது, நம்மரபினராகிய சேனைக்குடையார், அல்லது சேனைத்தவர்களையே என்பதற்கு யாதொரு ஐயமுமில்லை. மற்று எந்தஜாதியிலும் இந்நாமங்கள் பூண்டவர்கள் ஒருவருமில்லை. பூர்வகாலமுதல் சேனைத்தலைவருக்கு, இந்நாமங்கள் உரித்தாயிருந்து வருகின்றன. கைக்கோளர், சேனைத்தலைவர் என்று கூறிக்கொள்வது பின்காலத்து ஒட்டக்கூத்தர் கூத்து. கைக்கோளர் சேனைக்

குடையார் என்னும் பட்டத்துக்கு பாத்தியம் பாராட்டுகிறதில்லை. வேளாளருக்கு தொல்காப்பியத்தில்,

"வேளாண் மாந்தர்க் குழுதூ ணல்ல
தில்லென மொழிப பிறவகை நிகழ்ச்சி"

என்று உழவு சிறப்பு தொழிலாகவும், மேல்காண்பித்த மற்ற அறுதொழிலை பொதுவாகவும் அகத்திணையில் கூறப் பட்டிருக்கிறது. அவ்விதம் கூறிய அறுதொழிலில் நெசவு தொழில் ஒன்றாக காணப்படவில்லை. ஆகையால், செங்குந்தர் வேளாளராகமாட்டார். செங்குந்தருக்கு நெசவுதொழில்தான் சிறப்பானது.

தொல்காப்பியத்திற்கு பின்னிட்டு எழுதிய சிலப்பதிகாரத்தில் கைக்கோளரைப்பற்றி பேசுங்கால், இந்திரவிழ ஊரெடுத்த காதையுள்:—

"பட்டினும் மயிரினும் பருத்தி நூலினும்
கட்டு நுண்வினைக் காருக ரிருக்கையும்"

(இ - ள்.) பட்டுநூலாலும் எலிமயிராலும் பருத்திநூலாலும், நுண்ணியதொழில்களை ஊசியாற்பிணிக்கும் பட்டுசாலியரிருக்கு மிடங்களும்". இதில் கைக்கோளரை நெசவுகாரர் என்று கூறியிருக்கிறது. மேலும் கி. பி. 11, 12, நூற்றாண்டில் எழுதிய சேந்தன் திவாகரத்தில்,

"வேளாளரறு தொழி லுழவு பசுக்காவல்
தெள்ளிதின் வாணிபம் குயிலுவம் காருகவினை
பொள்ளியிருபிறப் பாளர்க்கேவல் செய்தல்"

என்று கூறியிருக்கிறது. இதில் "காருகவினை" அதாவது நெசவுதொழில் ; புதிதாக வேளாளர் தொழில்களில் ஒன்றாக சேர்க்கப்பட்டது. நாளுக்குநாள் தொழில்கள் நிலைபடாமல் ஒரு வகுப்பார் மற்றவர்தொ

ழிலே செய்ய ஆரம்பித்தனர். வீரசோழியம் என்பது கி. பி. 11-வது நூற்றாண்டின் முடிவில் எழுதியது. அப்பொழுது வேளாளர் தொழில்கள், ஈதல், உழவு, கிரையோம்பல், வாணிகம், குயிலுவம் இருபிறப்பாளர்க்கு ஏவல்செய்தல்மட்டும் கூறியிருக்கிறது. ஆகையால் கி. பி. 12-வது நூற்றாண்டில்தான் வேளாளர் தொழில்களில், நெசவுதொழில் புதிதாக சேர்க்கப்பட்டிருக்கவேண்டும். இது விஷயம் "தமிழ் ஆராய்ச்சிகள்" எழுதிய, ஸ்ரீமான். யம். சீனிவாச அய்யங்கார் M. A. அவர்கள் தம்மிட நூலில் 65-வது பக்கத்தில்: "பெரிய வேளாளர் வகுப்பில் கைக்கோளர் பள்ளிகள் முதலிய தாழ்ந்தசாதிகள் இதில் வெளிப்படையாக சேர்க்கப்பட்டது. அதற்குதகுந்தபடி, "கைக்கோளன்" என்கிற வார்த்தை இந்தநூலில் முதல்முதல் ஜாதி பெயராக காணப்படுகிறது" என்று எழுதியிருக்கிறார். ஆகையினல் திவாகரர் காலத்துக்கு பின்னர்தான் கைக்கோளர், வேளாளர் எனகூறிக்கொள்ள இடங்கொடுத்தது. அதற்கு முன்னர் அவர்கள் அவ்விதம் கூறிக்கொள்ள ஆதாரம் ஒன்றுமில்லை. செங்குந்தர் பிரபந்ததிரட்டில் கல்வெட்டுறை வரைந்த ஸ்ரீமான் சுப்பிரமணியதேசிகனுர் திவாகரம் எனும்நூலிலிருக்கும்,

> "செங்குந்தர் படையர் சேனைத்தலைவர்
> தந்து வாயர் காருகர் கைக்கோளர்"

என்னும் பாடலில், சேனைத்தலைவர் என்கிறபெயர், கைக்கோளருக்கு உண்டென்று கூறப்படுவதினல், 2400 ஆண்டுகளுக்கு முன்னர் உக்கிரப்பெருவழுதியார் காலத்துக்கு அனுகாமையில் திவாகரம், அம்பல் சேந்தனல் பாடப்பட்டதென்றும், அக்காலத்திலேயே செங்குந்தருக்கு

செங்குந்தர்படை என்றும், சேனைத்தலைவர் என்றும் பெயரிருந்திருக்கின்றன என்று மகிழ்சியடைகிறார். இக்காலம் ஆங்கிலம் வாசித்து தமிழ்நூல் ஆராய்ச்சிகளில் விற்பன்னரான அநேகர் கூறும் சரித்திர ஆராயச்சிக்குட்பட்ட தீர்மானங்கள் இவருக்கு தெரியாது போலும். இவ்வாராய்ச்சிக்காரர்கள், திவாகரம் கி. பி. 11, 12-வது நூற்றாண்டில் தான் எழுதப்பட்டிருக்க வேண்டுமென்று தீர்மானித்திருக்கிறார்கள். செங்குந்தப்புலவராகிய ஒட்டக்கூத்தர் இருந்த காலம் கி. பி. 11-வது நூற்றாண்டு கடையிலிருந்து கி. பி. 12-வது நூற்றாண்டில் முற்பகுதி வரையிலுமாகிறது. இவர் கவிசக்கிரவர்த்தி என்று பெயர் பெற்று சோழராஜர்களிடத்தில் மிகுசெல்வாக்குடையவரா யிருந்தனர். அக்காலத்தில் தம் குலத்தை மேல்படுத்த கோறிஈட்டி எழுபது எனும் நூலை எழுதினர். அதில் செங்குந்தர்பிரபாவம் சரித்திரத்துக்கு மேல்போய்விட்டது. அவரால்தான் அவர்குலம் செங்குந்தர் குலமென்றும், சேனைத்தலைவர் குலமென்றும் புதிதாய் உயர்த்தப்பட்டது. இவர்கள் கூறிக்கொண்டதை அனுசரித்து திவாகரர் பின்னர் தாம் எழுதிய நூலில் இவர்களை சேனைத்தலைவர்என்று வரைந்திருக்கிறார்.

மேல்குறித்த ஸ்ரீமான் சுப்பிரமணிய தேசிகனார் நூலாற்றல், ஆடையாக்கல் முதலியதொழில்கள் தங்களுக்கு இடையில் வந்ததொழில் என்கிறார். தற்கால தமிழ் ஆராய்ச்சிக்காரர் அதுஅவர்கள் ஆதிதொழில் என்கிறார்கள். சுப்பிரமணியகடவுள் வேண்டுகோளினால் இவர்களுக்கு நெசவுதொழில் திருவள்ளுவர் கற்பித்து கொடுத்தார் என்பது புராண பிரசித்தம். திருவள்ளுவர் சுமார்2000 ஆண்டுகளுக்குமுன்னர் இருந்தவர் என்று தற்கால தமிழ்நூல் ஆராய்ச்

சிக்காரர் தீர்ப்பு. அதின்பின்னர் தோன்றிய சிலப்பதிகாரத்திலும் இவர்கள் தொழில் காருகவினையேயாம். மேலும் "ஈ கண்டம் தப்பிதே மக்கமேகதி" என்கிற பழமொழி நெசவு தொழிலுக்கும் யுத்தம் செய்தலுக்கும் விரோதப்படுகிறது.

## 2. பெரிய புராணம்,

பெரியபுராணத்தில் கூறப்படும் அறுபான்மும்மை நாயன்மாரில் பதின்மூவர் வேளாளர் வகுப்பினைச் சேர்ந்தவர். அவ்வேளாளரில் சேனைத்தலைவர் வகுப்பினை சேர்ந்தவர் இருவராவர். அவர்களாவன:—1 மானக்கஞ்சார நாயனர். 2 ஏயர்கோன்கலிகாம நாயனர். இவ்விரு நாயன்மாரும் வேளாளர் குலத்தில் சேனைத்தலைவர் மரபைச் சேர்ந்தவரென்று பெரியபுராணம் கூறுகின்றது.

### மானக்கஞ்சார நாயனர்.

இவரைக்குறித்த பெரியபுராணப்பாடல் அடியில் வருமாறு:—

"அப்பதியிற் குலப்பதியா யரசன் சே னுபதியாஞ்
செப்பவருங் குடிவிளக்கத் திருவவதா ரஞ்செய்தார்
மெய்ப்பொருளை யறிந்துணர்ந்தார் விருமியவே யாண்மைகுடிமை
வைப்பனைய மேன்மையினர் மானக்கஞ் சாரனர்"

ஆறுமுகநாவலர் இந்நாயனரைக் குறித்து தம்மிட வாசகமான பெரியபுராணத்தில் கூறுகிறதாவது:—"வேளாளர் குலத்திலே அரசர்களிடத்தில் பரம்பரையாக சேனதிபதி நியோகத்திலிருக்கிற குடியிலே இவர் கஞ்சாரூரிலே பிறந்தார்" என்கிருர். நியோகம், அதிகாரம் ஒரு பொருட்சொற்கள்.

மேல்கண்டபாட்டில் இந்நாயனர் "சேனபதியாம் குடி" யில் அவதரித்தார் என்பதின்பொருள்; "சேனபதி" என்பதற்கு "படைத்தலைவன்" அல்லது "சேனைத்தலைவன்" என்று அருத்தம். "சேனபதிகுடி" என்பது சேனைத் தலைவர் மரபு என்று பொருள்படுகிறது. மேலும், "வேளாண்மை குடிமைமேன்மையினர்" என்பதினுல் இச்சேனைத்தலைவர் மரபு வேளாளர் வகுப்பைச் சேர்ந்ததென்பதை வலியுறுத்துகிறது.

## ஏயர்கோன்கலிக்காம நாயனர்.

இந்நாயனரைக்குறித்த பெரியபுராணப் பாடல்கள் அடியில்வருமாறு.—

"இன்ன வாழ்பதி யதனிடை யேயர்கோக் குடிதான்
மன்னி நீடிய வளவர் சேனபதிக் குடியாந்
தொன்மை மேவிய திகழ்ச்சியா னிறைவது தூய
பொன்னி நாட்டுவே ளாண்மையி னுயர்ந்த பொற்பினதால்"

"அக்கண் மிக்கவக் குடியினி லவதரித் தருளார்
தூக்கை வாழ்முடி யார்தொண்டர் கலிக்காம ரென்பார்
தங்க ளுயக ரடிபணி வாரடிச் சார்ந்து
பொங்கு காதலி னவர்பணி போற்றுதல் புரிந்தார்"

இதில் முதல்பாட்டில் கலிக்காமநாயனர் அவதரித்தது "சேனபதிக்குடி" என்றே கூறப்பட்டிருக்கிறது. இதிலும் "சேனபதிக்குடி" என்பது "சேனைத்தலைவர்" மரபு என்று பொருள்கொள்ளுகிறது. இம்மரபு வேளாளர் வகுப்பைச்சேர்ந்ததென்றும் கூறியிருக்கிறது. "தொன்மை மேவிய திகழ்ச்சியால்" என்பதனுல் இம்மரபு அக்காலத்திலும்கூட பண்டைகாலத்தது என்று நினைக்கப்பட்டதென்றால் தற்காலத்திற்கு அது எவ்வளவு பண்டைகால

மாயிருக் கிறதென்பதை யோசிக்கவும். இவ்விருநாயன்மாரும் சுமார் 1500 ஆண்டுகளுக்கு முன்இருந்தவர். இந்த பிரகாரமாக பெரியபுராணத்தினால், சேனைத்தலைவர் வேளாளரைச்சேர்ந்த சேனைத்தலைவர் என்று ஐயமற ஏற்படுகிறது.

4. சேலம்ஜில்லாவிலும், வடஆர்காடு ஜில்லாவில் சில பாகங்களிலும் உள்ள சேனைத்தலைவர்களுக்கு ஓர்ஜாதி எஜமானன் மத்தூரில் இருக்கிறார். அவருக்கும் அந்தபட்டம் பெறுபவர்களுக்கும் படைவீட்டு முதலியார் என்கிறபெயர் பரம்பரையாக விளங்கிவருகிறது. "படைவீடு" என்றால் "பாசறை"என்று பொருள். மேல்கண்ட இடங்களில் உள்ள சேனைத் தலைவர்களுக்கு "செட்டியார்" என்கிற பெயரிருந்தாலும் மேல்கண்ட எஜமானனுக்கு "படைவீட்டு முதலியார் "என்பது எஜமான உத்தியோகத்திற்கு உரியபெயர். அவர் சுயபெயர் வேறு.

5. அகண்டாகார சச்சிதானந்த பரிபூரண சுயம்பிரகாச சப்பொருளாய் விளங்கும் ஸ்ரீகைலாயபதியானவர் ஆன்மாக்கள் உய்யும்பொருட்டு திருக்கோவில் கொண்டிருக்கிற பலஸ்தலங்களுள் விசேஷமானதும், சிவலோகமெனப் பெயருடையதும், மஹாவிஷ்ணுவும் பிரமதேவனும் தான் தான் பிரமமென்று வாதித்து போரிட்டதை தீர்க்கும்பொருட்டு சிவபெருமானார் அக்கினிமலையாய் அவர்கள் மத்தியில் நின்று கலகத்தை தீர்த்தருளி, அவர்கள் வேண்டுகோளினால் அவரே கிரிரூபமாய் நின்ற ஸ்தலமாகிய திருவண்ணாமலை முதல் தீபார்த்தனை அல்லது உபயம் சேனைத்தலைவர் அல்லதுசேனைக்குடையாருக்கே தொன்று தொட்டு உரிமையாயிருக்கிறது. இதனாலும் சேனைத்தலைவர் மேன்மை விளங்குகிறது.

6. பூர்வீககாலத்தில் தென்னாட்டு அரசர்களுக்கு இருவகை ராஜசபைகள் (Assemblies) அரசியலில் உதவிபுரிந்துவந்தனர். கி. பி. இரண்டாவது நூற்றாண்டிலேயே இச்சபைகளிருந்திருக்கின்றன. சிலப்பதிகாரத்தில் அவைகளை அடியில் வருமாறு குறிப்பிடப்பட்டிருக்கிறது:—

"ஐம்பெருங் குழுவு மெண்பே ராயமு
மரசகுமாரும் பரதகுமாரும்
கவர்பரிப் புரவியர் களிற்றின் றொகுதிய
ரிவர்பரித் தேரின ரியைந்தொருங் கீண்டி"

இதன்பொருள்:ஐம்பெருங்குழுவும் ஆயமும் செறிந்து வீதிக்கண்ணே புரவியர், களிற்றினர், தேரினரான அரசகுமாரும் தம்மிற்பொருந்தி ஒன்றுபடத்திறண்டு, என்க.

ஐம்பெருங்குழு என்பதை திவாகரத்தில், கூறுவது:—

"அமைச்சர் புரோகிதர், சேனாபதியர், தவாத்தொழிற்றூதுவர், சாரண ரென்றிவர், பார்த்திபர்க், கைம்பெருங், குழுவெனப்படுமே". இதில் சேனாபதியர் என்பது சேனைத்தலைவராகிய நம்மினத்தை குறிக்கின்றது.

மேல்கண்ட திவாகரத்திலேயே எண்பேராயத்தை குறித்துக் கூறுவது:-

"கரணத் தியலவர் கருமவிதிகள் கனகச்சுற்றங் கடைகாப்பாளர், நகரமாந்தர் நளிபடைத்தலைவர், யானைவீரரிவுளிமறவ, ரினைய ரெண்பே ராயமென்ப".

இதில் நளிபடைத்தலைவர் என்பது நம்சேனைத்தலைவரையே குறிப்பிடுகிறது. இவ்விருவகை ராஜசபைகள் ஒவ்வொன்றிலும் தனிசபைகளாக நம்மினத்தினில் பெரியோர்அரசியலில் உதவிபுரிந்து வந்தனரென்றால் இவர்கள் மிகவும் சிறப்புள்ளவர்களாகவே இருந்திருக்க வேண்டும்.

இதனால் சேனைத்தலைவர் சிலப்பதிகார காலத்திலேயே அதாவது கி. பி. இரண்டாவது நூற்றாண்டில் இருந்தனரென்று ஏற்படுகிறது. பின்கல நிகண்டில் அரசர்க்குறிய ஐம்பெருங்குழுவின்பெயர், அடியில்வருமாறு கூறியிருக்கிறது:—

"மந்திரியர் புரோகிதர் சேனாபதியர்
தந்திரத் தூதர் சாரண ரென்றில
ந்தமி லரசர்க் கைம்பெருங் குழுவே"

ஐம்பெருங் குழுவினராவர்- 1 புரோகிதர். 2 அமைச்சர், 3 சேனாபதியர், 4 தூதர், 5 ஒற்றர். இவர்களில் சேனாபதியர் என்பவர் சேனைத்தலைவராகிய சேனைக்குடையார். இவர் மிகுந்த வீரமுடையவர், வீரக்கழலணிந்தோர். இவர்களுக்கு அரசன் "ஏனாதி" பட்டம் சூட்டலுமுண்டு.

ஆங்கில அரசாட்சியில் தற்காலத்தில் சேனைக்கு தலைவராகிய, Commander-in Chief, பெரிய சட்டசபையில் மெம்பராயிருப்பதுபோல், பூர்வ தமிழரசர் காலத்தில் யுத்த வீரர்களாய் விளங்கிய சேனைத்தலைவராகிய நம்மினத்தவர் அரசரிட ஆலோசனை சபைகளில் தனிச்சபைகளாக விளங்கினர்.

(7) கலியுகம் 4855௵, இங்கிலீஷ் 1753௵த்தில் சங்கரநாயனார் கோவில் சேனைத்தலைவர் மடத்து பண்டாரத்துக்கு கொடுக்கப்பட்ட செப்பேட்டு பட்டயத்தில் சேனைத்தலைவரைப்பற்றி அடியில் குறிப்பிட்டபடி கண்டிருக்கிறது:—"மதுரையில் சொக்கநாதரைப் பாடியசங்கத்தார், மறவாதவாள், கோவலன்பொருட்டு வெள்ளியம்பலத்திருந்து வடக்கீவாசல் பத்திரிகாளிவசனம் கேட்டவர்கள், சேரமான்பெருமானாகிய இளங்கோவடிகளிடத்திருந்து சிலப்

பதிகாரம் பாடுவித்தவர்கள், பரமசிவனுக்கு இலையமுதடைக்காய் பரிகலத்திலேற்றி வரம்பெற்றவர்கள், இந்திரன்சம்மந்தரான, இடிக்கொடிபிரதாபரான, கற்பகமாலைப் புயத்தரான, மதயானை விலைகண்ட மகாபுத்திவல்லவரான, சேனைக் குலாதிபரான, சந்திரவட்டக் கவிகைக்குடையரான, விபூதி சாட்சரநிலமையரான, குருபாதம்மறவாத சிந்தையாளரான, பஞ்மூவேந்தர் வரிசைபெற்றவரான, அஷ்டதிசை மெச்சும் புகழாளரான, வாணிபமுற்கொண்டுசெய்தொழில் குணபூத வாழ்வுமன்னரான, தனம்தானம் அன்னதானம் மறவாத தருமரான, தண்டமிழ்க்குறையாணியற்றவரு சங்கமநியோகரான, தண்டாது கிளைவளந்தாங்கு மன்னவரான, வீரவிசயம்பெற்ற வேந்தரான, நினைத்தபடியே முடிக்கும் பெருமை மீறு சற்புத்திரரான, இப்படிவிருதுபெற்ற சேனையார்".

8 ஸ்ரீ காஞ்சிபுரம் குமாரகோஷ்டம் ம-ா-ா-ஸ்ரீ வாமதேவதேசிகரவர்களால் ஆதிகாலத்தில் உற்றமுன்னோர்கள் வடமொழியாய் அமைத்திருந்த செய்யுட்களை தமிழில் மொழிபெயர்க்க பட்ட சேனைகுலத்தார் செப்பேடுபட்டயம் ஒன்று இருக்கிறது. அதில் ஸ்காந்தபுராண வரலாறு இக்குலத்திற்கே உரிமைசெய்திருக்கிறது.

9 சேனைத்தலைவரில் சிலர், அதிகபராக்கிரமசாலியாயும் மாயா தந்திரங்கள் தெரிந்தவனாயுமிருந்த வல்லான் என்கிற வீரனைவென்று, அக்காலத்திலிருந்த சோழராஜனிடத்தில் நாடுபூமி முதலான வெகுமதிவாங்கியிருக்கிறார்கள்.

10 மேலும் சேனைத்தலைவர்மரபில் வீரபெருமாள் என்கிற ஒரு சிறுபிள்ளை தில்லைமகாளி தேரோடும்படி தானே வந்து பலியாகி தன் இனத்துக்குச் சோழராஜனால் அநேக வெகுமதி கிடைக்கும்படி செய்தான்.

## 3 அத்தியாயம்.

### வேளாளர் பிரிவின் விவரணம்.

24 கோட்டம், 79 நாடு, 1900 சிற்றூர்களினின்று. 12000 கோத்திரபூர்வமாய் வேளாளர் வாழ்ந்துவந்தனர் என்று கூறப்பட்டுள்ளது. இவர்களில் பலர் பலகாரணங்களால் பல வேறுதிசைகளை நோக்கிசென்று ஆங்காங்கே நிலைத்தமைகொண்டு அந்தந்த நாட்டின் காரணப்பெயராகிய வழக்கம் தலைப்பட்டதாக தோன்றுகிறது. வேளாளர் பல பிரிவினராயிருக்கிறார்கள். அவைகளில் சில தகூறுவோம்:-

1 துளுவவேளாளர் 2 பூந்தமல்லி வேளாளர் 3 கொண்டைகட்டிவேளாளர் 4 வேளான்செட்டி வகைராக்கள் 5 கொடிக்கால் பிள்ளைமார் அல்லது பிள்ளைமார் 6 கணக்கிலி நாட்டார் 7 கார்க்காத்தார் 8 சிறுகுடி 9 அகமுடியர் 10 நீர்பூசி 11 கோட்டைவேளாளர் 12 செந்தலைவேளாளர் 13 சேனைத்தலைவர் அல்லது சேனைக்குடையார் 14 வெள்ளிக்கைவேளாளர் 15 பவளக்கொடிவேளாளர், இன்னும் பல வகுப்பினராய் பிரிந்திருக்கிறார்கள். இவைகள் சிலதில் பலபிரிவுகள் இருக்கின்றன.

கொடிக்கால் பிள்ளைமார் அல்லது பிள்ளைமார், என்பவர் சேனைத்தலைவர் அல்லது சேனைக்குடையாரே. இவர்கள் தென்இந்தியாவில் அநேகஜில்லாக்களில் சேனைத்தலைவர் அல்லது சேனைக்குடையார் எனும் பெயருடைய வேளாளராயிருக்கின்றனர். இவர்களுக்கு வீரசைவவேளாளர் என ஒரு பூர்வபெயருமுண்டு.

இவ்வேளாளர் பலவகுப்பினருக்கும் பட்டப்பெயர்களுண்டு. அவையாவன 1 முதலியார். 2 பிள்ளை. 3 ரெட்டி. 4 செட்டி. 5 நாயக்கர். 6 கவண்டர் முதலிய பல.

இவர்கள் பலரும் வேளாளரேயாம். இவர்கள் எல்லா வகுப்பினரையும் ஒன்றுசேர்த்து ஓர் பெரும்வேளாண் குடியாக்கல் நன்மை.

## 4 அத்தியாயம்

### சேனைத்தலைவர் பட்டபெருமை

(1) செட்டி:—

பல வகுப்புகள், அவரவர்கள் செய்யும் தொழிலை அனுசரித்து செட்டி என்கிறபதம், பொருள் சேர்க்கும்திறமை என்றும், வர்த்தகம் என்றும் பொருட்படும், செட்டு எனும் பதத்திலிருந்துவந்தது. வர்த்தகம் செய்பவர்கள் எல்லாம் செட்டிகள் என்கிற பட்டத்தை தரித்தனர். கவரைகள், சனுவர், சாலியர், சேடர், சேணியர், குயவரில் ஓர் வகுப்பினர் முதலானவர்கள் தம்மை செட்டிகளென்றும், கோமுட்டிகள், வாணியர், நாட்டுக்கொட்டையார் முதலியவர்களும் தம்மை செட்டிகளென்கிற பட்டப்பெயர்களுடன் கூறுகிறார்கள். இப் பட்ட பெயர்களெல்லாம் தொல்காப்பியர்காலத்தில் காணேம். அவர்கள் காலத்தில் வர்த்தகம் செய்தவர்களுக்குதான் செட்டிகள் என்பது முதன்மையாக பாத்தியமுள்ளது. அக்காலத்து எண்பிரிவைப் பார்த்தால் வேளாளர்தாம் முக்கியமான வர்த்தகர்களாகயிருந்திருக்கவேண்டும். வேளாளரில் சிலவகுப்பார் ஆதியிலிருந்து செட்டிகள் எனப்பட்டம் பெற்றிருக்கின்றனர்.

திருத்தொண்டர்புராண வரலாற்றில் வணிகர் ஐவர் என்பார் மூவோர்ப்பத்தியை விசாரிக்குமிடத்து வேளாண்செட்டிஎனும் வகுப்பில் ஏறக்குறைய அடங்குகிறது. அவற்றுள் சிலவற்றைவிளக்குவாம். இஃது இக்காலத்தும் காரைக்காலில் காரைக்கால் அம்மையாருக்குமாம்பழ உற்சவம் நடத்தப்பட்டு வருகிறது. அவ்விடம்சென்று விசாரித்தால் அதன்உண்மை வெளிப்படும். அஃதன்றியும், கம்பர் வேளாளருக்கு பாடிய திருக்கைவழக்கத்துள்ளும்,

"அன்றவரு மாதவர் காக்கி யமாங் கனிசேட்க
ஒன்றவரு வித்தளித்தே யோங்குங்கை"

என்று காரைக்காலம்மையாரையும்,

"எம்பிரா னெம்பெருமானீத்திராதி பர்க்கரிய
தம்பிரானுக் குரைத்த சந்தனக்கை,

என மூர்த்தி நாயனாரையும்.

கோலாலக் கோவணத்துக் கள்வர் தங் கோண்முழுது,
மாலா வளந்தரித்த மாண் புலகை,"

என அமர்நீதிநாயனாரையும் பாடியிருந்தலால் அவர்கள் எல்லோரும் வேளாண்செட்டிகளென்று தோற்றுகிறது. ஆகவே பெரியபுராணத்திற் கூறும் வணிகர் என்பதும் வேளாளர் என்பதும் தொழில் வேற்றுமைபற்றி பிரித்துக்கூறியதேயன்றி வருணவேற்றுமைப்பற்றி பிரித்துக்கூறியதன்றும். காவிரிப்பூம்பட்டினத்து செட்டியாராகிய பட்டணத்துபிள்ளையாரெனக் கூறியது மிதுவாம்.

ஆதியில் வேளாளர் தென்தேசம் வடக்கிலிருந்துவந்து சேரசோழ பாண்டியராஜ்யத்தை ஏற்படுத்திய விவரம் முன்னரே கூறியிருக்கிறது. அவ்வாறு தென்தேசம்வந்த வேளாளரில் சிலர் வாணிகம் அதாவது வர்த்தகம் செய்தவர்

கள் வணிகராம். அதனல் இவர்கள் பழங்குடிவணிக ரெனப்படுவார். இவர்களுள் பலபிரிவினர் உளர். இவர்கள் எல்லாரும் "எட்டிபட்டம்பெற்ற பழங்குடி வணிகர்களேயாம்." சிலஜில்லாக்களில் சேனைத்தலைவருக்கு "செட்டி" என்கிறபட்டமுண்டு. இவர்கள் வர்த்தகம் செய்வதால் தேசாசாரத்தை அனுசரித்தும், வேளாளர் மரபை அனுசரித்தும், செட்டிகள் எனப்படுவார். மேலும் இச்சேனைத்தலைவர் முருகவேளுக்கு துணைவர்களாகவும் சகோதரர்களாகவும் சிருட்டிக்கப்பட்டவர்கள். முருகவேளுக்கு உள்ள அநேக திருநாமங்களில் செட்டி என்பது மொன்று. அக்காரணத்தினலும் சேனைத்தலைவர்களுக்கு ஷண்முகக்கடவுள் குலதெய்வமாகையாலும் இவர்களுக்கு செட்டிப் பட்டம் தகுதியேயாம்.

## இலைவணிகர்

சேனைத்தலைவர்களுக்கு இலைவணிகர் என்று ஒர்நாமம் உண்டு. அதன் காரணம் வீரவாகுதேவர்கள் கைலயங்கிரியை போய்சேர்ந்தபிறகு, அவர்கள்புத்திரர்கள் முசுகுந்த சக்கிரவர்த்தி புத்திரனகிய அங்கிவன்மனிடத்தில் சேனைத் தலைவர்களாயிருந்து அவனுக்கு சத்துருக்களாய் நேரிட்டவர்களை எல்லாம்வென்று ஜெயம்பெற்று மிகுந்த செல்வத்துடன் வாழ்ந்துகொண்டிருந்தார்கள்.

அவர்கள் சந்ததிவிர்த்தியாகி இவ்வுலகத்தில் சேனைத்தலைவர் அல்லது சேனைக்குடையாரென்னும் மரபினராய் சந்ததிவளரும் காலத்தில் முசுகுந்த சக்கிறவர்த்தியின் சந்ததியில் ஒரு சோழராஜன் அரசுசெய்துகொண்டிருக்கும்

போது, அவன்நாட்டில் வெற்றிலை கிடையாமலிருந்ததினால் இந்த உலகத்திலாவது மற்றஎந்த உலகத்திலாவது வெற்றிலை சம்பாதித்துக்கொண்டு வருகிறவர்களுக்கு அநேகம் வெகுமதி செய்கிறேனென்று பறை யறைவித்தான்.

அதைக்கேழ்விப்பட்ட சேனைத்தலைவர் மரபாரிற் சிலர் புறப்பட்டு இந்த உலகமெங்கும் விசாரித்துக்கொண்டு வருகையில் நாக லோகத்திலிருக்கிறதாக தெரிந்துகொண்டு சுப்பிரமணியரைக் குறித்து தவஞ்செய்து அவருடைய அநுக்கிரகத்தினால் அந்த உலகத்துக்கு போய் கொண்டுவந்து சோழராஜனுக்கு கொடுத்து நாடு பூமி முதலான சகலவெகுமதியையும் பெற்றுகொண்டு தாங்கள் கொண்டுவந்த வெற்றிலைக்கொடியைக் கொண்டு தோட்டங்கள் விர்த்திசெய்து அந்த வர்த்தகமும்செய்தார்கள். அதனால் மேல்சொல்லிய சேனைத்தலைவர்களுக்கு வெற்றிலைவணிகர் என்று ஒருபெயர்வந்தது. வெற்றிலைவணிகர் என்பதற்குபதிலாக "இலைவணிகர்" என்றும்கூறுவர். இந்தபெயர் சேனைத்தலைவரில் சிலருக்குதான் இருக்கிறது. அநேகமாய் எல்லாவிடங்களிலும் இவர்களை சேனைக்குடையார், சேனைத்தலைவர் என்றே பிரவினத்தர்களும் கூடசொல்லுகிறார்கள்.

இலைவணிகர் என்கிறபதத்தில் "வணிகர்" என்பது வாணியர் என்று அருத்தமல்ல. வாணியர் என்பது வேறுஒருஜாதி. வைசியகுலவிளக்கம் எனும் நூலில் அவர்களைப்பற்றி அடியில் குறித்தவாறு எழுதியிருக்கிறது:—
வாணியர்களை நிகண்டுகாரதிகளில் செக்காரென்று எழுதியிருப்பதாலும், காந்தம் சூதசங்கிதை,சிவமான்மியகண்டம் 12-வது சுலோக கருத்து மதுவாதலாலும், நாயன்மார்

புராணங்களில் அவர்களைத் தலைவிளையாளர் என்றமையா லும்; திவாகரநிகண்டுகளில் அவர்களை தாழ்மையாக சொல் லியிருப்பதாலும், அவர்கள் மன்னுமாரிஷிகோத்திரத்தா யிரத்தொருவரென்று வழங்கிகொள்வதாலும் கம்பர் வேளா ளரைச் சிறப்பித்துபாடிய,

"செட்டிமக்கள் வாசல்வழிச் செல்லோமே செக்கார
பொட்டிமக்கள் வாசல்வழி போகோமே-முட்டிபுகும்
பார்ப்பா ரகத்தை யெட்டி பாரோமே யெஞ்ஞான்று
காப்பாரே வேளாளர் காண்"

இக்கவியில் செட்டிகளென்றும் செக்காரென்றும் வே றுபிரித்திருக்கிறமையாலும், ஜாதிபேதவிளக்கம் எனும் நூ லில் வாணியர்களை தீண்டபெறாதவர் என்பதாலும், அந்த வாணியர்களுக்கும், சுப்பிரமண்ணியர் சகோதரரும் நவ வீரசந்ததியருமான சேனைத்தலைவர்களுக்கும் யாதொரு சம்பந்தமும் கிடையாது. இவர்கள் சரித்திரம்வேறு. அ வர்கள் சரித்திரம்வேறு. (Edgar Thurston) எட்கார் தர்ஸ் டன் என்பவர் தம்மிட "ஜாதிகளும் கோத்திரங்களும்" என் கிற நூலில் சேனைத்தலைவர்களாகிய இலைவணிகர் என்ப வர் வாணியர் அல்லவென்றும் ஜாதிவிஷயத்தில் வாணியர் களைவிட மேலானவர்களென்றும், திருநெல்வேலி ஜில்லாவில் கோவில்களில் வாணியர்கள்போகக்கூடாதென்றும், சுமார் 60-வது வருஷகாலமாக வாணியர் பூணூல் போடுகிறார்க ளென்றும், அதற்குமுன் போடவில்லை என்றும், நாட்டு கோட்டை செட்டிகளைவிடகூட சேனைக்குடையார் மேலா னவர்களென்று சொல்லப்படுகிறதென்றும் கூறுகிறார்.

இலைவணிகர் எனும் வார்த்தையில் வணிகர் என்பது செட்டு அல்லது வியாபாரம் எனும் பொருள்படும் வணிகம் என்கிறவார்த்தையிலிருந்துவந்து, வர்த்தகர் எனபொருள்

படும். ஆகையால் இலைவணிகர்என்பது “இலைப்பயிர் செய்பவர்” என்றுமட்டும்பொருள். இதனால்தான் சேனைத் தலைவருக்கு, கோடிகால்பிள்ளைமார் அல்லது பிள்ளைமார் என்கிறபெயர் தென்ஜில்லாக்களில் இருக்கிறது. இவர்களை சோழிய வேளாளரில் ஒருவகுப்பினராக ஏற்றுக்கொள்ளப் படுகிறது.

---

## சென்னை ஐகோர்ட்டு தீர்மானம்

திருநெல்வேலிஜில்லா பனங்குடி ஸ்ரீராமலிங்கசுவாமி கோவில் விஷயத்தில் இச்சேனைத்தலைவரைக்குறித்து நடந்த கேசில் சென்னை ஐகோர்ட்டார், 1912௵ த்திய 2வது அப்பீல் நெ. 1554ல் 1924இ௵ த்தில் செய்ததீர்மானத்தின் சுருக்கம் அடியில்வருமாறு:—“இலைவணிகர் என்கிற சேனைத்தலைவர்கள் மற்ற பிராமணர் வேளாளர் முதலியவர்கள் கோவிலுள் எவ்வளவு தூரம் போகிறார்களோ, அதைப்போல் இந்த ஜாதியாருக்கும் அவ்வளவு தூரம் போக பாத்திய முண்டென்றும், அபிஷேகம், அர்ச்சனை, நைவேத்தியம்செய்து பிரசாதம் வாங்க பாத்தியதை உண்டென்றும், இவர்கள் பாவத்தொழில் செய்வதாக கருதப்படும் வாணியர்கள் என்றுவது பிரதிவாதிகள் கட்சி அடாத நிலைமையில், இந்தஜாதியர் மற்ற பிள்ளை, முதலியார் என்கிறவர்களை ஒத்தவர்களென்று கருதப்படவேண்டுமென்றும், இலைவணிகருக்கும் வாணியருக்கும் எவ்வித சம்பந்தமுமில்லை என்றும், இலைவணிகர் என்றால் இலை + வணிகர், இலை என்பது வெற்றிலை, வணிகர் என்றால் வியாபாரம் செய்வது அல்லது பயிர் செய்பவர் அல்லது வெற்றிலை வர்த்தகர் என்றும், இவர்கள் வாணியர் அல்லவென்றும் தீர்மானிக்கப்பட்டது. இச் சேனைத் தலைவர்களுக்கு வேறுபெயர்கள்.

2. சேனைக்கடையர். மேல்கண்ட சேனைத்தலைவர்களில் சோழராஜனுடைய சேனையில் கடைவைத்து பலசரக்குகளும் விக்கிரயம்செய்துகொண்டிருந்ததினால் சேனைச்கடையர் என்று பிற்காலத்துபெயரும் உண்டாயிற்று. இவர்களைப் பற்றி ஜாதிபேதவிளக்கத்தில், இவர்கள் அக்காலத்தில் அனுசரித்த தொழிலைநாடி,

"தடையற வரிசி ருப்பிற் றும்பூலமுதலா யுள்ள
கடைபல பரப்புஞ் சேனைக் கடையராய் வாழ்வ ரன்றே"

3. முதலியார். இப்பட்டமும் சென்னைமுதலிய இடங்களில் இந்தசேனைத்தலைவருக்கு உண்டு. முற்காலத்தில் முதலியார், முதன்மையுடையவர், இடையர், நடுத்தரமானவர், கடையர், கடைசியானவர், என செல்வம் அந்தஸ்து அனுசரித்து மூவகை தமிழரில் இருந்ததாக பூர்வநூல்களில் தெரிகிறது. வேளாளருக்கு இப்பட்டம் வந்த காரணம் அருண்மொழித்தேவராகிய சேக்கிழார் பெரியபுராணம் செய்து அரங்கேற்றிய காலத்து சோழராஜன் முதலியோர் சேக்கிழார்வரவு நோக்கி மிக வியந்து அன்புமீதுற "எம்முதலிகளோ" என்ற காரணத்தினால் அது பட்டப்பெயராயிற்று என்பர். வேளாளருள் சேனைத்தலைவர், உழவித்துண்ணும் வேளாளர் வகுப்பைச்சேர்ந்து, அரசரிடத்தில் ஏனுதி, காவிதி பட்டங்கள்பெற்று முதன்மையாக இருந்தபடியினால் முதலியார் எனப்பட்டம் பெற்றிருக்கலாம்.

---

4. பிள்ளை :—

சேனைத்தலைவர்கள் நவசக்திகளிடத்து உற்பத்தியானவர்களாதலால் சிரேஷ்டமாக "பிள்ளைகள்" எனவும் பட்ட

முள்ளவர்களாயிருக்கலாம். சேக்கிழார் புராணத்தில் கூறியது :—

"இமயமலையரையன் மகடமூவக்கச்சியேகம்பர் திருமேனி குழைத்த ஞான்று, சமயவையாறினுக்குந் தலைவிக்கீசர் தந்தபடி யெட்டுமுக்கிராழி நெல்லும், உமை திருச்சூடக்கையால் கொடுக்க வாங்கி யுழவுதொழிலாற் பெருக்கி யுலகமெல்லாம், தமது கொழுமிகுதிகொடு வளர்க்கும் வேளாண்டலைவரை, அவ்வம்மையார் தமது அருமைத் திருவாக்கினுற், பிள்ளைகளே! யென வழைக்கப்பட்டமை காரணமாக அது பட்டப் பெயராயிற்று."

---

5. மூப்பனுர் :—

திருநெல்வேலி ஜில்லாவில் சில பாகத்தில் சேனைத்தலைவருக்கு "மூப்பனுர்" என்கிற பட்டமுண்டு. சேனைத்தலைவர்கள் என்பவர்கள் ஸ்ரீசுப்பிரமணியக்கடவுள் சூரபத்மனை சம்ஹரிக்கத் தமக்கு பிற்படையாக கொண்ட நவவீரர்களின் வழிவந்தவர்கள். ஸ்காந்த புராணத்தில் சேனைத்தலைவர் உற்பத்தி கூறிய இடத்தில் நவமணிமாதர் கர்ப்பம் தரித்து, காலம்தப்பி ஈசுபரி சாபத்தால்) கர்ப்பத்திலேயே வளர்ந்து மூப்பு அடைந்து, பின்பு சாப நிவர்த்தியினுல் மூப்பேரடும்கூட பிறந்ததினுலும், சேனைகட்கு தலைமை பூண்ட நவவீரர்களின் வம்சோர்ப்ப பரம்பரை குலத்தாரானபடியினுலும், மூப்பு என்னும் காரணப்பெயர் வழங்குகிறது. மேலும், மூப்பு, தலைமை, முதுமை முதலிய வார்த்தைகள் ஒரு பொருட் சொற்களாம். இது விஷயம் பின்வரும் அத்தியாயத்தில் விவரமாய் காணப்படும். இச்சேனைத்தலைவர்களுக்கு வேறுபட்டங்களுமுண்டு.

## சேனைத்தலைவர் பிரபாவம்.

இதனடியில் கண்ட பாடல் சேனைத்தலைவருக்குள் நெடுங்காலமாக சொல்லப்படுகிறது. ஆனால் அது யாரால் எக்காலத்தில் எழுதப்பட்டது என்று தெரியவில்லை, ஆயினும் அதில், இக்குலத்தின் பெருமைகள் சிலது இருப்பதால் அதையும் இதில் பதிப்பிக்கிறோம் :—

நாவலர்கள் புகழ்கின்ற அருணசலீசரிட நாயகி நடைச்சிலம்பில்
நவகோண திக்கிலும் நவவீரராகவே நலமாய்ப் பிறந்த பெரியோர்
தேவரணை சூரனை வென்று இந்திரனுக்கு தெய்வலோகம் பட்டம் கட்டி
தெய்வானை தன்னையே ஆறுமுகஸ்வாமிக்கு திருமணம் செய்த பெரியோர்
பாவணர் புகழ்கின்ற சோழனிட பட்டணம் பலமுள்ள
ராக்ஷதனை வீரவாள் கொண்டு வலியால் ஜயித்த பெரியோர்
காவான திருநீறு சிவனுடைய கோத்திரங்கற்பகக் கோழிக்கொடியும்
கார்த்திகை முதல் தீபம் வசந்தனிட மாலையும் கனமாய் படைத்த பெரியோர்
சேவரும் ஈஸ்வரன் திருநடனஞ் செய்கின்ற சிதம்பரேஸ்வரஸ்தலத்தில்
தேருவே மசானமும் கெந்தமும் பல்லக்கும் வெகுதிரமாய் படைத்த பெரியோர்
ஆவுடைய நதி சூழும் கல்ச நகர் தன்னிலே அதிக வல்லாண்மையுள்ளார்
அரசாளும் ராஜர்க்கு எதிராளியாய் நின்ற ஆனைசேனைத்தலைவரே.

---

## 5. அத்தியாயம்.

### சேனைத்தலைவர் மரபு.

(ஸ்காந்தபுராண வறலாறு).

கச்சியப்பசிவாசாரியார் ஸ்காந்தபுராணத்தில் கூறியபடி :

பூர்வத்தில் விஷ்ணு முதலிய தேவர்கள் சூரபத்மன் முதலியோரால் துன்புற்று, சிவபெருமானை வணங்கி, எம்பெருமானே அவ்வவுணர்களை சம்ஹாரம் செய்யும்படி கேட்க,சிவபெருமான் முருகவேளை சிருட்டித்தார். எவ்விதமாய் எனில், அவரிட திருமுகங்களிலிருந்து ஆறு அக்கினி பொறிகள் தோற்றுவித்தனர். அப்பொறிகள்தான் ஆறுமுகமுள்ள முருகக்கடவுளாயின. அப்பொறிகள் முதலில் அணுவாற்றுத மிக்க வெம்மையை உடையனவாயிருந்தபடியினால், உமாதேவியார் வேர்த்து, தமது திருவடிகளிலுள்ள நவரத்தின சிலம்புகள் ஒன்றோடொன்று புலம்பித்தாக்க தமது திருக்கோவிலுள்ளே ஓடினார். அப்பொழுது அவரிட சிலம்பினின்று ஒன்பது நவரத்தினங்கள் சிதறியது. அந்த ஒன்பது நவரத்தினங்களும், ஒன்பது சக்திகளாக தோன்றினார்கள். அச்சக்திகள் சிவபெருமான்பேரில் விருப்பம் வைத்தமையால் விரைவிலே கருப்பமுற்றார்கள். இதை கண்டு, பார்வதியார் நவசக்திகள் மீது கோபங்கொண்டு, "நீங்கள் இங்கு நமக்கு மாறாயினபடியினால், பலகாலம் இக்கருப்பத்தோடு இருக்கக்கடவீர்கள்" என்று சபித்தனர். அப்பொழுது நவசக்திகள் அஞ்சி நடுநடுங்கி சரீரம் வெயர்த்தார்கள். அவ்வெயர்வையினின்றும், பரமசிவன் திருவருளினாலே, ஒரிலக்கவீரர் உதித்தார்கள். அவ்வீரர்கள் இடியொக்கும் சொல்லையுடையவர்களும், பொன்னுடையை உடுத்தவர்களும், வாளையும் பரிசையும் கையிலேந்தினவர்களாய், சிவபெருமான் திருமுன்புசென்று, அவருடைய திருவடிகளை வணங்கி துதிக்கொண்டு நின்றார்கள். சிவபெருமான் அவர்களை நோக்கி, "நம்புதல்வர்களே! கேளுங்கள், தேவர்களுக்கு பகைவர்களாகிய அசுரர்களைக் கொல்லும்

பொருட்டு, நமது புதல்வனாகிய முருகக்கடவுளுக்கு நீங்கள் யாவரும் படைகளாகக் கடவீர்கள்." என்று திருவாய் மலர்ந்தருளினர்.

கச்சியப்ப சிவாசாரியர் கந்தபுராணத்தில் துணைவர் வருபடலத்தில் கண்ட பாடல்கள்:—

"ஆவ தெல்லையி னடுக்கமுற் றஞ்சியே யாங்கள்
மேவு மாதர்மெய் வியர்த்தன ரவ்வியர்ப்பதனிற்
றேவ தேவன தருளினாற் றினகரத்திரள்போ
லோவி லாவிறல் வீரக ளிலக்கர் வந்துதித்தார்."

"வருத்த னைப பொருங் கண்ணினர் வியர்ப்பதனில் வந்தாங்
கடுத்த மானவ ரேரிலக் கத்தரு மசனி
கடுத்த சொல்லினர் பொற்றுகி லுடையினர் கரத்தி
லெடுத்த வாளினர் பலகையாராகியின் டினரால்"

இவ்விலக்கத் தவரைப்பார்த்து பரமசிவன் கூறியது:—

"மைந்தர் கேண்மினோ நீவிர்கள் யாவரும் வயத்தா
விந்தி ராதியர் பகைவரை யடுவதற் கெமது
கந்த வேள்படை யாகுதி ரென்னவே கழறி
முந்து பேரருள் புரிந்தனன் யாவர்க்கும் முதல்வன்."

"கந்த வேள்படை யாகுதி" என்பதினால் குமாரனின் இணைபிரியா சேனைக்குடையோர்களாகி பொலிந்திருக்ககடவீர்கள் என்று திருவாய் மலர்ந்தருளியது சேனைத் தலைவர்களையே குறிக்கிறது. இதற்கு ஐயமில்லை.

இது நிற்க மேல்கூறிய நவசக்திகள் நெடுங்காலம் கருப்பத்தோடு கழித்தார்கள். அவர்களுள்ளே நந்தி கணத்தலைவர்கள் சிசுக்களாய், சிவபெருமானை தொழுது கொண்டிருந்தார்கள். கருப்பம் பாரம் பொராதவராய் சிவபெருமானையும் உமாதேவியாரையும் நவசக்திகள் வேண்

டிக்கொண்டனர். அதின்பேரில் உமாதேவியார் புதல்வரைப் பெற வாக்களித்தனர், பின்னர் புதல்வரைப் பெற்றார்கள். மாணிக்கவல்லியிடத்து வீரவாகும், மௌத்திகவல்லியிடத்து வீரகேசரியும், புட்பராகவல்லியிடத்து வீரமகேந்திரரும், கோமேதகவள்ளியிடத்து, வீரமகேசுரரும், வைடூரியவல்லியிடத்து வீரபுரந்தரரும், வைரவல்லியிடத்து வீரராக்கதரும் மரகதவல்லியிடத்து வீரமார்த்தாண்டரும், பவள வள்ளியிடத்து வீராந்தகரும், இந்திரநீலவல்லியிடத்து வீரதீரரும் அவதரித்தார்கள். அவர்கள் சிவபெருமான் பார்வதியார் முன்னர் வந்தபோது பார்வதியார் திருவாய் மலர்ந்தருளியது. ஷை கச்சியப்பசிவாசாரியார் பாடல்:—

"தேவியது கேட்டுமைந்தர் கருள்புரிய வவர்க்கெல்லாஞ் சிவன் வெவ்வேறு
தாவில்சுடர் வாளுதவி வியர்ப்பில்வரு மோரிலக்கர் தனயரோடு
நீங்களுமொன்றி றுங்கட் கிறைவனு கியசேனை நீக்கலின்றி
யேவலவன் பணித்தன்செய் தொழுதீரென் றெவரு மிசைந்து தாழ்ந்தார்."

இப்பாட்டில் தேவியார் ஈட்டி கொடுத்தார் என்று ஒன்றுமில்லை. சிவபிரான் வாள் சொடுத்தார் என்று இருக்கிறது. இந்நவவீரர் வம்சத்தார் தாம் சேனைத்தலைவர்.

தொல்காப்பியம், பொருளதிகாரம், 638-வது பாடலில்,

"வில்லும் வேலும் குழலும் கண்ணியுந்
தாரு மாரமும் தேரும் வாளும்
மன்பெற மரபி னேனோர்க் குரிய."

என்றதனால் தொல்காப்பியர் காலத்தில் வேளாளரில்

சேனைத்தலைவருக்கு வேலும், வாளும் உண்டென்று ஏற்படுகிறது. அக்காலத்தில் செங்குந்தர், அல்லது கைக்கோளர் என்ற பெயரே கிடையாது. ஆகையால் இவ்வேல், வாள் கொடுத்தது சேனைக்குடையார் அல்லது சேனைதலைவருக்கு தான் என்பது உறுதிபடுகிறது.

ஈட்டி எழுபது என்னும் நூலில் ஒட்டக்கூத்தர் பாடிய 42-வது பாடல்:—

"சேல்வேறு புலிவே ருகுஞ் சேதுவினளவாய்ச் சென்னி
கோல்வே றில்லாம லோச்சிக் கன்னியே கொள்ளனென்றே
மால்வேறு சிவன்வே றென்ன வழுத்திடா வண்மைபோல
வேல்வேறு குந்தம்வேறென் றிருபொருள் விளம்பார்
மேலோர்."

சென்னை கல்வி இலாகா டிபார்ட்டுமென்டில் உயர்ந்த உத்தியோகத்திலிருந்தவரும் தமிழ் நூல்கள் வல்லுனருமாகிய Mr. சி. டி. பார்த்தசாரதி முதலியார், B.A., L.T. என்பவர் செங்குந்தர் பிரபந்ததிரட்டுக்கு மதிப்புரை கூறியதில் அடியில் வருமாறு கூறுகின்றனர்.

"இந்த நூல் (ஈட்டி எழுபது) அவர்களுக்கு (செங்குந்தர்களுக்கு) தெய்வீக உற்பத்தியை ஆரோபித்து, ஆக்கியோன் 42-வது பாடலில் (மேல்கண்ட பாடலில்) கந்தவேளுடைய இணையற்ற சக்திவேலே தவிர வேறு அல்லவென்று சொல்லுகிற "குந்தம்" என்கிற வார்த்தையின் சப்த லக்ஷண பாகத்தின்பேரில், அதை நிலைநிருத்த முயலுகிறார். ஸ்காந்த புராணத்தை ஒரு பிரமாணமாக ஏற்றுக் கொள்ளவேண்டுமானல், இப்படி கூறுவது முழுமையும் நிரூபிக்கத் தக்கதல்லவென்று எனக்கு தோன்றுகிறது."

இதனுல் அவர் இவர்களை நவவீரர் மரபினர் அல்லவென்று கூறியதாக ஏற்படுகிறது.

டி மதிப்புறையாளர் மறுபடியும், "ஆனால் இந்த மத்திபமான விஷயம் முனிவரால் தெளிவாய் தன்னிட குணதோஷ பரிட்சையில் ஆராய்ச்சி செய்யப்பட்டு இந்த வாக்குவாதம் முடிவு செய்யப்படுமென்பதற்கு எனக்கு யாதொரு சந்தேகமும் இல்லை" என்கிறார். இதற்கு உத்திரமாக கூறப்படும் பாட்டில் "நம்பெருந்தெய்வம்" என்று வருகிறபடியினால் அப்பாடல் பாடியவர் செங்குந்தராயிருக்கவேண்டுமென்று ஏற்படுகிறது. அது நிரூபித்ததாகாது.

முசுகுந்த சக்கிரவர்த்தி சஷ்டிவிரதம் அனுஷ்டித்து சுப்பிரமணியர், லக்ஷத்து ஒன்பது வீரர்களை அவருக்கு உதவியாக, மானிடர்களாக சபித்ததாகவும், அவ்வீரர்கள் உலகில் வந்து அவர்களுக்கென்று ஏற்பட்ட நகரத்தில் குடியிருந்து, சேனைத்தலைவர் எனும் பட்டமும் பெற்று, சுவாமி அநுக்கிரகத்தினால் சக்கிரவர்த்தியின் சுற்றத்தார் வீட்டில் புத்திரிகளாய் பிறந்திருந்த தேவஸ்திரிகளை வீரவாகு தேவர் முதலானவர்களுக்கு விவாகம் செய்விக்க இனமுற்று வாழ்ந்துகொண்டிருந்தார்களென்றும், முசுகுந்த சக்கிரவர்த்தி வீரவாகு தேவர் புத்திரியை விவாகம் செய்துகொண்டதாகவும், வலன் எனும் அசுரனை நவவீரர் படைகளோடு போய் ஜெயித்ததாகவும், அவ்வாறு உலகத்தில் வந்த வீரர்களின் சந்ததியாருக்கு சேனைத்தலைவர் என்கிற பெயர் உண்டென்றும் புராணம் கூறும்.

அவ்வித சந்ததியார் செங்குந்தர் தாங்களென்றும், சேனைக்குடையாராகிய சேனைத்தலைவர் தாங்களென்றும்

வழக்கு இருக்கிறது. ஆனால் வெற்றிலை கொண்டுவந்து இலை வணிகர் என பட்டம்பெற்றது சேனைக்குடையாராகையால் இவர்கள்தான் நவவீரர் சந்ததி என்று ஏற்படுகிறது. கைக்கோளர்தாம் அவ்வித வெற்றிலைகொண்டு வந்ததாக பாத்தியம் பாராட்டுகிறதில்லை. சேனைத்தலைவர் என்ற பெயர் கைக்கோளருக்கு, திவாகரத்தில் 12ம் நூற்றாண்டுக்கு பின்னர் தான் கொடுக்கப்பட்டிருக்கிறது. சிலர் ஸ்காந்தபுராணத்தில் கண்டவைகளுக்கெல்லாம் தத்துவார்த்தம் கற்பித்து கூறுகிறார்கள். புராண விஷயம் இவ்விதமாக இருக்கிறது. ஆனபடியினால். அதை ஆதாரவாகக்கொண்டு சேனைக்குடையார் என்கிற சேனைத்தலைவரும், செங்குந்தரும் வழக்கு போடுவதில் நன்மை ஒன்றும் காணோம். நவவீரர் ஒன்பதின்மரில் ஒவ்வொருவராலும் ஒவ்வொரு ஜாதியாக, சேனைக்குடையார், கைக்கோளர், அகமுடியர் முதலாகிய ஒன்பது வகுப்பினர் தோன்றியிருக்கலாம் என்று,வருண சிந்தாமணி கூறுகிறது. அது எல்லா தகரார்களையும் நீக்குகிறது. எந்த வகுப்பினனும் புராணத்தை அனுசரிக்காமல் சரித்திரத்துக்குட்பட்ட நூல்களிலிருந்து ஆதரவு காண்பித்தல் வியக்கத்தக்கது. அவ்விதமாக சேனைக்குடையார் என்கிற சேனைத்தலைவருக்கு சரித்திரக்குட்பட்ட நூல்களிலிருந்து ஆதாரம் எடுத்து இந்நூலில் காண்பிக்கப்பட்டது.

செங்குந்தர் பிரபந்த திரட்டில், "கல்வெட்டுரையில்" காணப்படும் கல்வெட்டுகள் எல்லாம் கி. பி. 14-வது நூற்றாண்டுக்கு பின்பட்டவைகளேயாம். ஒட்டக்கூத்தர் காலத்துக்கு முன்னர் அவர்கள் கைக்கோளர் எனும் ஓர் ஜாதியாக ஏற்படாமல் நெசவு தொழில் செய்துகொண்டு வந்தார்கள். ஒட்டக்கூத்தர் தான் முதன்முதல் அவர்களுக்கு

சேனைத்தலைவர் என்கிற நாமம் சாற்றி,ஸ்காந்த புராணத்தை அனுசரித்து, நவவீரர் மரபினரென்றார். சோழராஜாக்களிடத்தில் ஒட்டக்கூத்தருக்கு இருந்த செல்வாக்கினாலும் அதிகாரத்தினாலும், அவர் கூறியது குற்றமுள்ளதென்று யாராலும் சொல்லமுடியாமல் போய்விட்டது. மேலும் இப்புலவர் கவிபாடுகிறவர்களை நவராத்திரி காலத்து இருவரிருவராக குடுமியோடு முடியிட்டு, இறங்கி நிற்ப நிறுத்தி அவர்கள் பதைக்க பதைக்க வெட்டுவது வழக்கமென்றும், அதுபற்றி அவரைக்குறித்து பிற்காலத்தார் :—

"இரண்டொன்றாய் முடித்துதலை யிறங்கப்போட்டு
வெட்டுதற்கோ கவியொட்டக் கூத்தரில்லை."

எனப்பாடியிருக்கின்றனர். புகழேந்தி புலவரே அவரை எதிர்த்து சிறைச்சாலையில் அமர்ந்தார். பின்னர் யார்தான் அவரை மறுக்கக்கூடும்? மேலும் இந்நவவீரர் சந்ததி விஷயம் அக்கரையில்லாத இதர ஜனங்கள் இவர் கவிசக்கிரவர்த்தியாகையால் அவரை நம்பினார்கள். அவர் கூறியதை அப்படியே நம்பி சிலர் கவியும் பாடிவிட்டார்கள். அவைகள் ஆதாரவுகளாகமாட்டாது. மேலும் Mr. M. சீனிவாச அய்யங்கார் M.A., அவர்கள், தமிழ் ஆராய்ச்சிகள் என்கிற தன்னிடநூலில், "கைக்கோளர் நாகவமிசத்தைச்சேர்ந்த எயினர் வகுப்பை சேர்ந்தவர்களென்றும், கி.பி. 10-வது நூற்றாண்டுக்கு முன்னர் கோலிய பறையர்களைப்போல் நெசவுகாரராயிருந்தார்களென்றும், ஓர் ஜாதி பெயராக, கி. பி. 14-வது நூற்றாண்டின் ஓர் காஞ்சிபுரம் சாசனத்தில், கைக்கோளன் என்கிற பெயர் காணப்படுகிறபடியினால், குலோத்துங்க சோழராஜன் (1150 கி.பி.) சபையில் கைக்கோள கவிசக்கிரவர்த்தி

ஒட்டக்கூத்தன் மிகுந்த செல்வாக்குள்ளவனாக இருந்த போது, கி. பி. 11-வது நூற்றாண்டுக்கும், கி. பி. 14-வது நூற்றாண்டுக்கும் மத்தியில், இந்த வகுப்பு நெசவுகாரர் கொஞ்சம் அந்தஸ்துள்ள தனி இந்து ஜாதியாக தெரிந்து கொள்ள ஆரம்பிக்கப்பட்டது என்பது நம்பக்கூடியதென்றும்" சொல்லுகிறார். மேலும் அவர்களைப்பற்றி அப்புத்தகத்திலே வேறு ஒரு இடத்தில், அநேக கைக்கோளர்கள் இடங்கை கட்சியைச் சேர்ந்திருப்பதில் உண்டாகும் அவமதிப்பை நீக்க, சென்ற ஆறு நூற்றாண்டுகளாக, அடியிற் கண்ட காஞ்சிபுரம் சாசனம்படி இந்துக்களிட கோவில்களில் பாடுகிறவர்களாகவும் ஆடுகிறவர்களாயுமாயினார்கள்,

"முதன்மையும் அடைப்பும் தேவர் அடிமையும், கைக்கோள்மையும் தாங்கள் நின்ற அடைவுகளிலே விற்றும் ஒற்றிவைத்தும் கொள்ளக்கடவர் ஆகவும்." (S.I.I. 1-122). என்றும் எழுதியிருக்கிறார்.

ஒட்டக்கூத்தர் காலத்து இருந்த உலகநீதி எழுதிய உலகநாத பண்டிதர் தம்மிட "ஜாதிபேதக விளக்கத்தில்" இவர்களைப்பற்றி ஒன்றும் சிறப்பாக கூறவில்லை. அதை வாசித்து பார்க்கவும். செங்குந்தர், பரந்தகன் என்கிற அரசனிடம் படைவீரர்களாக இருந்ததாக ஏற்றுக்கொள்ளக் கொஞ்சம் நியாயமிருந்தாலும், அதினாலேயே அவர்கள் நவவீரர், மரபினர் எனலாகாது. மறவர், நாயர், குரும்பர், படையாட்சிகள் முதலிய பல இனத்தார் படைவீரர்களாக இருந்திருக்கிறார்கள். அதினாலேயே அவர்கள் நவ்வீரர் சந்ததியாரா காததுபோல் இவர்களும் நவவீரர் சந்ததியாரார்.

## சேலம் ஜில்லா நாகரசம்பட்டியிலிருக்கும் கிராம பஞ்சாயத்து கோர்ட் பிரசிடேண்ட்

## நா. ராஜூ சுப்பிரமணிய செட்டியார்

## எழுதிய மதிப்புரை.

“சேனைத்தலைவர் பூர்வ சரித்திரம்” எனும் இந்நூல், பல பூர்வ நூல்களின் ஆதாரங்களைக்கொண்டு உலகப்பிரசித்திபெற்ற நம்மிட பெரியோராகிய D. கோபால் செட்டியாரால் எழுதப்பட்டிருக்கிறது. இந்நூலினுல் அவரிட பண்டைத்தமிழின் பாண்டியத்தியமும், ஆராய்ச்சி பெருமையும் நன்கு விளங்குகின்றன. இவரிட ஜீவிய சரித்திரத்தை அறிய பலர் விரும்புகிறபடியினுல், அதைச் சுருக்கமாக இதனடியில் வரைகின்றேன்.

நற்குணம் பலதும் நிறைந்த D. கோபால செட்டியார், சேலம் ஜில்லா தருமபுரியில், 1867ஆ நவம்பர்மீ 18உ நம் குலம் செய்த பூர்வ புண்ணியத்தினுல் லட்சுமி கடாட்சம் பெற்று, செல்வம் திரண்ட ஓர் குடும்பத்தில் அவதரித்தனர்.

இவர் தமிழ் பாஷையும ஆங்கில பாஷையும் வெகு திறமையுடன் கற்று சென்னையில F. A. பரிட்சை வரையில் வாசித்து, 189 ஆ த்தில் வக்கீல் பரிட்சையில் தேறி அவ்வருஷத்திலேயே, சேலம் ஜில்லா திருப்பத்தூரில் வக்கீலாக அமர்ந்தனர்.

1901-ம்ஆ த்தில், Her Majesty Queen Victoria அவர்கள் காலம் சென்றபோது, இவர் ஆங்கிலத்தில் ஓர்

" தாக்கப்பாட்டு " எழுதி, சீமைக்கு அனுப்பியதில் மதராஸ் கவர்ன்மெண்டார் இவருக்கு வந்தனம் அளித்தனர்.

இவர் 1911ஞ வரையில் திருப்பத்தூரிலேயே யிருந்தனர். அக்காலத்தில் இவர் ஜனசமுதாய நன்மைக்காக அநேக காரியங்களை செய்தனர். அவைகளின்பொருட்டு, Collector முதலிய அநேகர், இவர்பேரில் அன்பு பாராட்டினர். 1906ஞத்தில் நம் இந்திய தேசத்துக்கு சக்கிரவர்த்தியாயும், கிரேட் பிரிட்டன், ஜர்லாந்து முதலிய தேசங்களுக்கு அரசராயும், இப்போது இருக்கும் His Majesty ஐந்தாவது ஜியார்ஜ் அவர்கள் வேல்ஸ் இளவரசராக இந்தியாவுக்கு விஜயம் செய்தபோது, அவர்பேரில் ஆங்கில பாஷையில் ஓர் கவி இயற்றி வரவேற்றபோது, அதற்கு பிரதி யுத்திரத்தில், நமது செட்டியாருக்கு தனது அந்தரங்க காரியதரிசி, Sir Walter Lawrence அவர்கள் மூலமாய் வந்தனம் அளித்தனர். பின்னர் இந்த வேல்ஸ் இளவரசர் பேரால், திருப்பத்தூரில் ஓர் வாசக சாலை சமர்ப்பித்து, " Prince of Wales's Reading Room " என்று இளவரசர் இந்தியாவுக்கு விஜயம் செய்ததின்பொருட்டு ஞாபகார்த்தமாய் அதற்கு பெயரிட, அவ்விளவரசர் அனுமதி பெற்று, அவ்விதமே, அதற்கு பெயரிட்டு, சேலம் ஜில்லாவில் அப்பொழுது கலெக்டராயிருந்த துரையைக்கொண்டு யாவரும் புகழ, வெகு சிறப்பாய், திறப்பு திருவிழாவும் நடப்பித்தனர். திருப்பத்தூர் மஹா ஜனங்களும், நமது செட்டியார் திருநாமம் நெடுநாளிருக்க கல்லில் அவர் பேரை சாசனமாக நாட்டி, அவர் திரு உருவ படத்தையும் அந்த வாசக சாலையில் அன்று வைத்தனர். அவைகளை இன்றும் அவ்விடம் காணலாம்.

இவர் வக்கீலானது முதல் சாஸ்திர விசாரணைகளி லும், பொதுநன்மை காரியங்களிலுமே, அதிக கவனம்செலு த்திவந்தார். பின்னர் வக்கீல் வேலையில் வெறுப்புக்தோன்றி, ஜன சமுதாயத்திக்கு நன்மையான தொழிலே, இயற்ற வேண்டுமென்று, பேரவாக்கொண்டு, 1907ஹூத்தில் "New Reformer" என்னும் ஓர் ஆங்கில மாதாந்திரப் பத்திரிகையை, சென்னையில் ஏற்படுத்தி, பன்னிரண்டு வருஷகாலம், அதற்கு ஆசிரியராக வெகு கீர்த்தியுடன் நடத்திவந்தார்.

இப்பத்திரிகையினால் இவர் பெயர் நம்மிந்து தேசத் தில் மட்டுமல்ல, ஐரோப்பா, அமெரிக்கா, ஆஸ்திரேலியா முதலிய கண்டங்களிலும் பிரகாசித்தது.

அக்காலத்தில் ஐரோப்பா கண்டத்தில் ருஷியா, தேசத்தில் (Count Leo Tolstoy) கவுண்ட் லியோ டால் ஸ்டாய் என ஓர் அவதார புருஷர் இருந்தார். இவர் (Montenegro) மான்ட்டினிகிரோ அரசர் வம்சத்தைச் சேர்ந்தவர். இவருக்கு எழுபதுகோடி ரூபாய்கள் பொரு மான ஆஸ்தி இருந்தது. இம்மகான் ஏழைகளிருக்கும் போது தான்மட்டும் தனவந்தனுயிருப்பது நீதியல்லவென்று தீர்மானித்து, தன்னிட செல்வமெல்லாம் பட்டணத்து பிள்ளையார்போல் சர்வசங்கபரித்பாகம் செய்துவிட்டு, உல கத்திலுள்ள ஏழைகளுக்கெல்லாம் ஏழையாக குருகினர். இப்பெருமானை கடவுள் அவதாரம் என்று உலகத்தினர் கூறினர், பல அரசர்கள் மெச்சினர். ருஷியா தேசத்து சக்கிரவர்த்தியும் அவரை மதித்தனர். அவரிருந்த யாஸ்னு போலியானு எனகிற கிராமத்துக்கு தினம்தினம், அவர்

தரிசனத்துக்காக பற்பல தேசங்களிலிருந்து தனவான்களும், கல்விமான்களும், யாத்திரையாக வந்தவர்கள் கணக்கிடமுடியாது.

உலகத்தில் ஏழைகள் என்பதே இல்லாமல் எல்லா மனிதர்களும் சமசுகத்தை அனுபவிக்க வழிகள் காட்டும் அநேக ஆச்சரியமான நூல்களை இப்பெரியார் வரைந்துள்ளார். அவைகளில் காணும் கருத்துகள் இதுவரையில் எந்த கல்விமானாலும் சொல்லப்படவே இல்லை.

இப்பெரியாராகிய மஹாரிஷி, நமது கோபால செட்டியாரின் கல்வித்திறமையும், உலக நன்மைக்காக அவர் நடத்தும் பத்திரிகையின் சிறப்பையும், அதில் அடங்கிய சாஸ்திர விசாரணை கருத்துகளையும் கேள்வியுற்று, உலகத்தில் யாருக்கும் அக்காலத்தில் கடிதம் வரையாதிருந்த அப்பெரியார் தாமே சுய ஹஸ்தலிகிதமாய் நம் செட்டியாருக்கு ஓர் கடிதம் விடுத்தனர். அக்கடிதத்தில் செட்டியாரின் வியாசங்கள் திறமையானதென்று செட்டியாரை புகழ்ந்து பேசியிருக்கிறார். அக்கடிதத்தையும் அவர் திருகரத்து எழுத்தையும் கண்டு ஆனந்தமடைய அதை தருவித்து பார்த்த ஐரோப்பியர்களும் கல்விமான்களும் கணக்கிடமுடியாது.

நமது செட்டியார், லியோ டால்ஸ்டாயின் சீடரில் ஒருவர். நம் இந்தியாவில் இப்போது சூரியனைப்போல் பிரகாசிக்கும் மகாத்மாகாந்தியும் அப்பெரியோரின் சீடர்.

டால்ஸ்டாய் என்பவர் சமாதியாவதற்கு ஒரு வருஷத்திக்கு முன்னர் தன்னைக்குறித்து அபிப்பிராயங்கள் எழுத உலகத்தில் பேர்பெற்ற இருநூறு கல்விமான்களுக்கு அவர் கடிதங்கள் எழுதி அவர்களிடமிருந்து வந்த வியாசங்களில்

ஐம்பத்தி ஐந்தை மட்டும் ஏற்றுக்கொண்டனர். அவ்விதம் ஏற்றுக்கொள்ளப்பட்டவர்களில் நம் இந்தியாவில் நம்ம செட்டியாரும், Dr. ஆல்மாமூன் சுக்கிரவர்தி M.A., LL.D., ஆகிய இருவரே. United States' President ஆயிருந்த Mr. வில்லியம் காரிசன் போன்றவர்கள் அதற்கு எழுதியவர் என்றால் நம் செட்டியாரின் பெருமையை என்னவென்று சொல்லலாம்! அந்த வியாசங்கள் 55-ம் ருஷிய பூாஷையில் மொழி பெயர்க்கப்பட்டு அச்சிடப்பட்டிருக்கின்றன. அதில் நமது செட்டியாரின் வியாசத்தைக் கண்டு மகிழாதவர் இலர்.

உலகத்தில் மதஸ்தாபகராக தோன்றிய ஏசு, மகமத்து போன்று, பேர்சியா தேசத்தில் உதித்து, பாஹாய் எனும் ஓர் சர்வ வியாபக மதத்தை நாட்டி, சுமார் ஒரு கோடி அமெரிக்கர்களையும், ஐரோப்பியர்களையும் அதில் சேர்த்த அப்துல்பாஹா அப்பாஸ் என்பவர் 1914௵த்தில் நமது செட்டியாருக்கு எழுதிய ஓர் கடிதத்தில் செட்டியார் தெய்வீக உண்மைகளை அறிந்தவரென்றும் பலவிதமாய் வியந்து கூறியிருக்கின்றனர் என்றால் இவர் பெருமையை என்னவென்று சொல்லலாம்!

நமது செட்டியார் நடத்தும் பத்திரிகையின் மேன்மையை அறிந்து, இந்தியா கவர்ன்மெண்டாரும் அதை ஆதரித்து வந்தனர்.

இந்தியாவுக்கு கவர்னர்-ஜெனரலாயிருந்த Lord Minto என்பவர் 1909௵த்தில் சென்னைக்கு விஜயம் செய்தபோது, அவரிட அந்தரங்க காரியதரிசியாகிய Col. Sir Dunlop Smith என்பவர் மூலமாக நமது செட்டி

யாருக்கு தன்னை வந்து பார்க்கும்பொருட்டு, ஒரு தந்தி அனுப்பி இவருடன் கண்டுபேசி, நம்ம பூர்வ தமிழரசர்கள் வழக்கம்போல நமது செட்டியாருக்கு பரிசுகளும் கொடுத்து, இந்தியாவில் எல்லா கவர்ன்மென்ட் காலேஜ்களிலும், இவரிட பத்திரிகை வாசிக்க கவர்ன்மெண்டார் சந்தாதாரராக பணம் கொடுக்கும்படி உத்திரவு செய்தனர். இத்தியாதி கௌரவங்கள் செட்டியாருக்கு அவரிட பத்திரிகையால் உண்டாயின.

1923ஆம் வருஷத்தில் Lord Reading, இந்தியாவில் Governor-General ஆக இருந்தபோது அவர் சுய நகரவாசியான அவர் சினேகிதர், Mr. Aaron Mobbs என்பவர் நமது செட்டியாரைக்குறித்து அந்த வைசிராய் அவர்களுக்கு வெகு மேன்மையாக சிபார்சு செய்திருந்தார். அப்படி செய்த Mr. Aaron Mobbs, தான் வைசராய்க்கு சிபார்சு செய்திருப்பதாயும் அவரைப்போய் பார்க்கும்படியாயும் நமது செட்டியாருக்கு எழுதி யிருந்தார். ஆனால் அம்மாதிரி அவ்வளவு தூரம் டில்லிக்கு போய் Lord Reading அவர்களை பார்க்க செட்டியாருக்கு சமயம் வாய்க்கவில்லை. அப்படி செட்டியார் போய் பார்த்திருந்தால் இவருக்கு அநேக நன்மைகள் விளைந்திருக்கும்.

நமது தமிழ் நாட்டில் பிராமணரில்லாதாரிட மதசம்பந்தமானதும், ஜனசாரமானதுமான இயக்கங்களுக்கு திருவனந்தபுரத்திலிருந்த Professor T. சுந்தரம்பிள்ளை அவர்கள், M.A., முதல் காரண கர்த்தாவாயினும், அவர் இறந்த பிறகு அக்கோட்பாடுகளை விருத்திசெய்து, பிராமணரல்லாதாருக்கு தன்னிட பத்திரிகையின் மூலமாயும் வேறு

விதத்திலும் கற்பித்து, தென்னிந்தியாவில் அவ்வியக்கங்களையும், அவர்களிட ராஜரீக இயக்கங்களையும் உருவுபடுத்தி, நிலை நாட்டிய கீர்த்தி நமது செட்டியாருக்கே உரியது. இதற்கு "Justice" தினப்பத்திரிகையே சாட்சியமிட்டிருக்கிறது.

நமது செட்டியார் சிறு வயதிலிருந்து ஈசுவர விசாரணையிலிருந்தவர். சைவ சித்தாந்தம் முதல் பிறமத நூல்களெல்லாம் ஆராய்ச்சி செய்து, தாயுமானவர்போல் "சைவ சமயமே சமயம்" என்கிற தீர்மானத்துக்கு கடைசியில் வந்தனர். சைவ நூல்கள் யாவற்றையும் ஆராய்ந்து அதின் உண்மை தெரிந்தவரானபடியால், அச்சமயத்தை உலகெலாம் பரப்ப பேரவா கொண்டு, சைவ சித்தாந்தத்தை விளக்கும் நூல் ஒன்றை ஆங்கிலத்தில் எழுதி லண்டன் நகரத்திலேயே அச்சிட்டனர். அதின் பெயர், New Light upon the Philosophy of India என்பதாகும். பத்தாயிரம் காப்பிகள் அச்சிடப்பட்டன. இச்சைவ சித்தாந்த நூலை புகழாத பத்திரிகைகள் கிடையாது லண்டன் நகரத்தில் தினப்பிரதி லக்ஷக்கணக்கான காப்பிகள் பிரசுரிக்கப்படும் London Times என்கிற தினசரி பத்திரிகையே, அதின் Supplementல் நமது செட்டியார் புத்தகத்தை வியந்ததன்றி, நமது செட்டியார் இந்து தேசத்திலே மிகவும் பேர்பெற்ற சைவ சித்தாந்த நிபுணர் என்றும் கூறியிருப்பது மிகவும் போற்றதக்கதாகும். அதின்பேரில் ஆங்கில நாட்டிலும், அமெரிக்காவிலும், இப்புத்தகம் விரைவில் விற்கப்பட்டன. மேல்நாட்டிலெல்லாம் சைவ சித்தாந்தம் பரவியது. இவர் செய்த பேருபகாரத்தை சைவ சித்தாந்திகள் என்றும் மறக்காமல் நன்றி பாராட்டவேண்டும். இன்னும்

இவர் செய்த தத்துவ நூல்களும் இதர நூல்களும் ஆங்கிலத்திலும் தமிழிலும் பல உள. அவைகளை விரிக்கில் இடம் போதாது.

இவர் சைவ சித்தாந்த நிபுணர் என்பதற்கு இவர் செய்த நூல்களே பொதுமான சான்று. London Times பத்திரிகையே அவருக்கு அப்பெயர் கொடுத்ததென்றால் வேறு என்ன சாட்சியம் வேண்டும்? ஆயினும், சென்னை கவர்ன்மெண்டில் மந்திரியாக இருந்த Hon'ble Sir T. N. Sivagnanam Pillay அவர்கள் 1925௵த்தில் சவுந்திர மஹாலில் புதிய சைவ சித்தாந்த சபை திறந்தபோது, நமது செட்டியாரை முன் காலத்திலும் தற்காலத்திலும் சைவ சித்தாந்தத்தில் கீர்த்திபெற்றவர்களுடன் உவமித்து, இவர் சைவ சித்தாந்த நிபுணர் என்று பலவாறு வியந்து பேசியது உலகம் அறியும்.

இன்றைக்கும் இவர் சென்னை புதிய சைவ சித்தாந்த சபைக்கு காரியதரிசி. அகில இந்தியா—பர்மா புதிய சைவ சித்தாந்த சபைக்கு பிரசிடேண்ட். அச்சபையில் அநேக ஐரோப்பியர்கள் மெம்பர்களாயிருக்கிறார்கள். 1925௵த்தில் அச்சபா நாயகராக பம்பாய் சென்று அங்கே சைவசித்தாந்த பிரசங்கங்கள் பல செய்து கீர்த்தியடைந்தனர். தென்னிந்தியாவிலும் பல பிரசங்கங்கள் செய்து பெயர் பெற்றிருக்கிறார். இவர் ஆங்கிலத்திலும் தமிழிலும் கவி எழுதும் சக்தி வாய்ந்தவர். முன்னிருந்த Madras Standard பத்திரிகை இவரை "திருப்பத்தூர் கவிராயர்" என்று 1896௵த்திலேயே கூறியது. இவரைப்போல் உலக பிரசித்தி அடைதல் எல்லாராலும் முடியாது. "மன்னனினும் மாசறக்கற்றோர் சிறப்புடையர்" என்றார் ஆன்றோர். ஆகையால் இவரை நம் குலகுருவாக ஏற்று, பல இடங்களுக்கு தருவித்து, நம்மினத்தோர் சைவ பிரசங்கங்கள் செய்வி[illegible] அறிதல் இன்றியமையாதது.

# விளம்பரம்.

—(:o:)—

இப்புத்தகம் வேண்டியவர்கள் சென்னை ராயப்பேட்டையிலிருக்கும் "நியு ரிபார்மர்" முன் பத்திராதிபர் D. கோபால செட்டியாருக்கு எழுதவும்.

விலை அணா 4.

மேல்கண்டவரிடம் அவர் செய்த அடியில் கண்ட இதர புத்தகங்களும் அகப்படும்.

| | | ரூ. | அ. | ப. |
|---|---|---|---|---|
| 1. | முப்பொருளுறவு ... ... | 0 | 8 | 0 |
| 2. | வாழ்க்கை போதம் ... ... | 0 | 4 | 0 |
| 3. | பரம இச்சா ஞான தீபிகை ... | 1 | 0 | 0 |
| 4. | சடர் சிவஞான சூரன் பராக்கிரமம் ... | 0 | 2 | 0 |
| 5. | நூதன மறுமை விளக்கம் ... | 0 | 8 | 0 |
| 6. | ஆதி திராவிடர் பூர்வ சரித்திரம் ... | 0 | 5 | 0 |
| 7. | தமிழர் சரித்திரம் ... ... | 0 | 1 | 0 |
| 8. | New Light upon the Philosophy of India. ... ... ... | 2 | 10 | 0 |
| 9. | Count Leo Tolstoy: His Life and Teaching ... ... | 0 | 5 | 0 |
| 10. | New Reformer Essays ... | 2 | 0 | 0 |
| 11. | Chidambara Rahasyam Revealed (In the press) ... ... | 2 | 0 | 0 |